ஞாயிறு வெளியீடு. விலை 0–1–3. REGD. No. M. 4642.

# திராவிடநாடு

மலர் 3. 4–3–45 இதழ் 49.

## நீ யார்?

(ஏ. வீலர் வில்காக்ஸ்)

உலகினிலே இருவகை மாந்தருண்டு.
கூறுவையோ அவர் தான் யாரென்று,
பாவிகளும் ஞானிகளுமோ? இல்லை.
செல்வரும் வறியருமோ? இல்லை.
தலைதாழ்ந்தாரும் தூக்கினாருமோ? இல்லை.
சுகப்பட்டவரோ? துக்கித்தவரோ? இல்லை.
உலகினிலே இரு வகை மாந்தர்தானுண்டு.
அவரே பிறரைக் கைதூக்கி விடுவார்;
பிறரால் தூக்கப் படுவார்.
எங்கு சென்றாகிலும் சீர் தூக்கிப் பார்,
இந்த இருவகைப் பிரிவினையே காண்பாய்.
ஒருவர் தூக்குவார்; இருபதின்மர் தூக்கப் படுவர்.
நீ எந்த வகுப்பில் சேர்ந்து சிறப்புறுகிறாய்?
தூக்குவோர் சுமையைக் குறைக்கிறாயா?
தூக்கப் படுவோருடன் சேர்ந்து துன்புறுகிறாயா?

# மதுரைக்கு டிக்கட் இல்லை!

பரதன்

கலியாணமாம் கலியாணம்! இந்தக் கிழங்களுக்கு வேறு வேலை கிடையாது. காலைமுதல் மாலைவரை, மாடுநான்! இந்த வாழ்வுக்கு ஒரு கூட்டு வேண்டுமாம் எனக்கு! அவள் வேற, வீட்டிலே உட்கார்ந்துகொண்டு, அதுவேண்டும் இது வேண்டும், அன்னத்தின்சேலையைப்பார், அகிலாண்டத்தின் வளையலைப்பார், சொர்ணத்தின் சொகுசைப்பார், சொக்கம்மாவின் சிரிப்பைப்பார், என்று இரவிலே ஈட்டியால் குத்தவேண்டும் போலிருக்கு, இந்த வேதனையை நான்படவேண்டுமாம், இதற்கு, வீட்டிலே உபதேசம்செய்கிறார்கள். நான் கெட்டகேட்டுக்குக் கலியாணம் வேறு வேண்டுமா! இப்போதாவது தொல்லை காலையிலே மட்டும்இருக்கிறது.

“டே! கழுதே! தடிப்பயலே! முகத்தைப்பார்! அழுமூஞ்சி! வேலை செய்வதென்றால் ஏண்டா இப்படிமூக்கால்அழுகிறாய். முன்னங்கிப்பத்தைபோல வாங்கவில்லையா பணத்தை. ரோஷமில்லாத ஜென்மம்! அன்னக்காவடியாக இருக்கும்போதே மண்டைக்கர்வம் இப்படி இருக்கிறது இதுகளுக்கு” காலையிலே நடக்கிறது இந்த அர்ச்சனை. இரவிலேயாவது, எதாவது மனக்கோட்டை கட்டியபடி இப்போது காலந்தள்ளமுடிகிறது. இந்த நிம்மதிக்கும் உலைவைக்கிறார்கள், என்னைப்பெற்ற யமன்கள்! கலியாணம் செய்துகொண்டால், இரவிலேயும் காலைக்காட்சிதானே இருந்து தீரும். பாஷையிலேவித்யாசம்இருக்கும், ஆனால் தொல்லை, தொல்லைதானே! எந்தஉருவிலே இருந்தால் என்ன?

எஜமான், உருட்டிமிரட்டிடும் கண்களோடு, தர்பார்நடத்துவார், வீட்டுக்காரி, விழியிலே நீரை வரவழைத்துக்கொண்டு, விசாரகீதம் பாடுவாள். அவன் ஏசும்போதாவது, கோபம் வரும், ஒருசமயமில்லாவிட்டால் வேறோர்சமயம், விறைத்துப் பார்க்கலாம், முணுமுணுக்கலாம், சாக்கிட்டுத்திட்டலாம், இவைகளால் சிறிது மனஆறுதலாவது உண்டு. அவள், பக்கத்திலே படுத்துக்கொண்டு, உடல்உரசும் நேரத்திலே உள்ளத்தை முள்ளால்குத்தும்போது, கோபம் குறைவாகவும் சோகம் அதிகமாகவும் இருக்குமே. பாவம்! எவ்வளவு பரிவுஇவளுக்குநம்மிடம்! நமதுசுகதுக்கத்துக்குப்பாத்யப்பட்டவள். நம்மைக்கேட்கும் உரிமைஉள்ளவள்! நாமும்அவளுக்குத் தேவையானவைகளை வாங்கித்தரக் கடமைப்பட்டிருக்கிறோம். நாம்அவளுடைய புருஷ[illegible] நல்ல சேலை [illegible]ள்உடுத்துவது போல, [illegible]—என்றெல்லாம் தோன்று[illegible] அவளிடம் கோபித்துக்கொள்ளவும்முடியாது, காலைவேளையிலே எஜமானனைப் பார்த்தது போலக் கடுமையாகப்பார்க்கவும் முடியாது, தவறிப்பார்த்தாலோ தளும்பும்நீர் கன்னத்திலே புரளும், பிறகு, நானாக அதைத்துடைத்து, விம்மலை அடக்கி, வேண்டியதை வாங்கித்தருகிறேன்என்று வரம்கொடுத்து, முன்தொகையாக முத்தம்பெற்று, பெருமூச்சுடன்கிடக்கவேண்டும். காலையிலே அந்தக் கடினசித்தம் படைத்தோன் அடேகழுதே! என்றுஏசினானே அதுஆயிரம்தடவை கேட்டுச்சகித்துக்கொள்ளக்கூடியதாகத் தோன்றும், அர்த்தராத்திரியிலே அவள், “ஆமாம்! நான்கேட்டால்வாங்கித்தருவீர்களா? என்னிடம் ஆசைஇருந்தால்இப்படி ஏமாற்றுவீர்களா? ”என்று கொஞ்சுவதைக்கேட்டும், அவள்மனம் கோணாமல் நடக்கும் மார்க்கம் இல்லையே என்பதைஎண்ணித் திண்டாடுவது, சகிக்கமுடியாததொல்லையாக இருக்கும்.

அவர்கள் கலியாணம்செய்துகொண்டு கண்டபலன் என்ன? நான்! ஒருஏழை! பரிதாபத்துக்குரிய பாட்டாளி! இது தெரிந்தும்என்னையும்கலியாணம் செய்துகொள்ளடா என்றுவற்புறுத்துகிறார்கள். எனக்கு இருக்கும் கஷ்டம்போதும், கலியாணமும் வேண்டாம்.............”

பிரம்மச்சர்ய ஆஸ்ரமத்திலே, மில் தொழிலாளி மதுரை, இருந்தபோது, இதுபோலக்கூறிவந்தான். ஆயுள்பூராவும், அந்த ஆஸ்ரமத்திலேயே இருந்துவிடுவது என்று தீர்மானித்தான். அவனுக்கு ஆறணா கூலி, ஒன்றேகால் ரூபாயானது! ஆஸ்ரமத்தைமாற்றிவிடவேண்டிய அவசியமும் பிறந்தது. “என்ன செய்வது? அவர்கள் மூச்சுஇருப்பதற்குள் மூணு முடிபோடுவதைப்பார்க்கவேண்டுமென்று பிடிவாதம்செய்கிறார்கள். நான் கலியாணம் செய்துகொள்ளாவிட்டால்சாகிறபோது கூட அவர்கள் மனச்சாந்தியில்லாமலே இறக்கவேண்டிநேரிடும். நம்மைப்பெற்று வளர்த்தவர்களுக்கு நாம் ஏன்மனக்குறை ஏற்படும்படிநடந்துகொள்வது? எதுவோ இருக்கிற கஞ்சியைக்குடித்துவிட்டு, கஷ்டமோ சுகமோ, நம்மோடு கிடக்கட்டுமே ஒரு [illegible]டை. என்னமோ அவளைத்தொட்டு [illegible]கிற வேளை, பகவான் கண் திறந்துபார்க்கட்டுமே, கஷ்டம் தீரட்டுமே.” கலியாணத்துக்குத்தான் சம்மதி[illegible] பெற்றோரின் வற்புறுத்தலால் தான் என்பதை மதுரை இதுபோலக் கூறினான். கொஞ்சம் உண்மைஇருந்தது அவன்கூறியதிலே. ஆனால் அவன் பிரம்மசரியத்தைவிட்டுக் கிரஹஸ்தாஸ்ரமத்திலே பிரவேசிக்க விரும்பியதற்கு முழுக் காரணம், பெற்றோரின்பெருமூச்சுமட்டுமல்ல, பெரியநாயகியின்புன்சிரிப்புந்தான். அவன் அதை வெளியே சொல்லவில்லை! அவன் மட்டுந்தானா? எந்த மதுரையும் அவனுடைய பெரியநாயகியின் புன்சிரிப்புக்குக் கட்டுப்படுவதைவெளியே சொல்லத்தான் மாட்டார்கள்!!

“மதுரை! உங்கவீட்டுத் தோட்டத்திலே மருக்கொழுந்து இருக்குதாமே! கொஞ்சம் கொடு.”

“ஏன்! சாமிகோயிலுக்கா?”

“அம்மன்சன்னதிக்கு! சாமிக்குஇல்லை”

“எந்த அம்மன் சன்னதி?”

“அடே, போடா மக்கு! அதாண்டா, என் சம்சாரம், இல்லை, சௌபாக்கியம், அவளுக்குத்தான். கோயிலுக்கும் இல்லை, குளத்துக்கும் இல்லை”

“திருமலை! எது நீ சம்சாரம் கீறின கோட்டைத் தாண்டமாட்டே போலிருக்கே. உங்க வீட்டுக்காரம்மா, என் வேணும்னு நீ எண்ணெயே கொண்டு போயிடுவேபோலிருக்கே.”

“ஆமாம்! நாம்ப ராஜாசர்! வைரமாலையும், கைநிறைய வளையலுமா வாங்கித்தரப்போறோம்? என்னமோ பாபம், நம்மைக்கட்டிக்கிட்ட தோஷத்துக்கு நம்ப சக்தியானுசாரம் எதுவோ செய்ய வேண்டியதுதானே. நான்மட்டுந்தானா? நாளைக்கு உனக்கு நடக்கட்டுமே! பாரேன், அப்போ நீயும் அப்படித்தான்”

“நானா? நான்தான் கலியாணமே செய்துகொள்ளப்போறதில்லையே!”

“வேணபேரு, இப்படிச் சொன்னவங்க. எப்படிப்பட்ட பிரம்மச்சாரியும், கொஞ்சநாள் போனா, எவளையாவது கண்டு இளிச்சிவிட்டுக், கலியாணம் செய்துகிட்டுத்தான் கிடப்பான். எந்தச் சீமையிலேயும் நடப்பதுதான் இது, நீ மட்டும் என்ன?”

திருமலை, மதுரையின் நண்பன், இருவருக்கும் ஒரே இடம் உழைப்பதற்கு. மாலைவேளையிலே, திருமலை இந்த உபதேசம் செய்து வந்தான் மதுரைக்கு. ஆனால் வீட்டுக்குப்போனதும், திருமலை, மதுரையாகிவிடுவான். அதாவது சௌபாக்கியம் ஏதாவது வேண்டும் என்று கேட்டதும், திருமலை “ஆரம்பமாய்விட்டதா, உன் தொல்லை! இதைத்தெரிந்துதானே, அந்த மதுரை, கலியாணமே செய்துகொள்ளப்போவதில்லை என்று சொல்கிறான். அவன் புத்திசாலி. இந்த ரோதனை இல்லை,” என்று கூறுவான்.

“பார்ப்போம் அந்தப் பிரம்மச்சாரியின் பிடிவாதத்தை. கலியாணம் செய்துகொண்டா கஷ்டமாம் அவருக்கு. பெண்

(11-ம் பக்கம் பார்க்க)

# நிகோலாஸ் தீர்ப்பு!

—[ C. N. A. ]—

"இந்தத்துரைமகனை யார்அழைத்தார்கள் தாம்பூலம் வைத்து?

இவருடைய தீர்ப்பை யார் கேட்டார்கள்!

துஷ்டன்! துடுக்குத்தனமாக எழுதிவிட்டான்,

பிரிட்டிஷ் பிரச்சாரம்! இவன்அமெரியின் கூலி!

மேயோவின் தம்பி! அவள்போலவே ஒரு அபாந்தக்களஞ்சியத்தை எழுதினான்.

நிக்கோலாஸ் ஒரு நிந்தனைக்காரன்!"

ஒரு பேனா! அதைமறுக்க நாட்டிலே பலருடைய பேனா முனைகள், முழுத்திறமையைபக்காட்டிவிட்டன. ஒரு புத்தகம்! அதை மறுத்துக் கத்தைகத்தையாக எழுதித்தள்ளிவிட்டனர், தேசபக்தியால்!

பீவர்லிநிக்கோலாஸ் எழுதிய "இந்தியாவைப்பற்றித்தீர்ப்பு" என்ற புத்தகத்துக்குப், பலமான கண்டனம்! ஆம்! பலமான என்ற பதமே பொருத்தமானது, ஏனெனில் கண்டனத்திலே பலம்இருக்குமளவு, நியாயம் காணோம்! வேண்டுமானால். பலமான கண்டனம் என்பதுடன், இது சகஜம், என்று சேர்த்துக்கொள்ளலாம், ஏனெனில் நிக்கோலாஸ் யாராருடைய குட்டுகளை வெளிப்படுத்திவிட்டாரோ, அவர்களுக்கு, அவர் மீது கோபம்பிறப்பதும், கோபங்காரணமாக அவரைத்தாக்க முற்படுவதும் சகஜம்! ஆனால் கண்டனத்தைக்கக்கியவர்கள், நிக்கோலாஸ் கூறியவை தவறு என்று காரணம்காட்ட முடிந்ததா? இல்லை! முடியாதுபோனது, கண்டனக்காரர்களின் திறமைக்குறைவைக் காட்டுவதல்ல! உள்ளதைக்கூறினார் நிக்கோலாஸ், உறுமல் தவிற வேறு அதற்குஎதிரிடையாகஎதையும் கூறுவதற்கில்லை.

என்னசெய்வது? ஊமையை, ஊமை என்றால், அந்தமொழியிலேயே அவன்கத்தித்தன் கோபத்தைக்காட்டத்தான்செய்கிறான். "நான் கெட்டால் கெட்டுப்போகிறேன். நீ மகாபதிவிரதை! போதும் போடி, வாயை மூடிக்கொண்டு" என்று பேசாத, தூர்த்தையின் தொகைகுறைவு தானே! அதிலும்ஒருநாட்டைப்பற்றியும், பண்டைப்பெருமை வாய்ந்த (!) நாட்டைக்குறித்தும்,ஒருகட்சியைப்பற்றி, பலமான பிரச்சார யந்திரத்தைப்பக்கபலமாக வைத்துக்கொண்டிருக்கும் கட்சியைப்பற்றியும், பலஇனங்களை அடக்கி ஒடுக்கியஒருமதத்தைப்பற்றியும், நிக்கோலாஸ், மனதிற்பட்டதை, அச்சம் தயை தாட்சணியமின்றிக்கண்டித்தால், அந்தக் கட்சி, அந்தமதம், அந்த நாட்டுப்பெயர் கூறி நாடகமாடும் ஆரிய வீரர்களுக்குக் கோபம்வராமலா இருக்கும்.

கோபம்வரலாம், அதுகூடச் சகஜம்! ஆனால் கோபத்தோடுகூடக் கொஞ்சம் வெட்கமும் பிறக்கவேண்டுமே! பீவர்லி நிகோலாஸ்எழுதியதைப்படிக்கும்போது கோபமாகத்தான் இருக்கும், அதிலும் ஒருவெள்ளைக்காரன் இப்படிஎழுதுவதா என்று ஆத்திரமாகத்தான் இருக்கும், ஆனால், இப்படிக்கண்டவர்கள் கேலிசெய்யும்படியான ஆபாசநிலையிலேதானே நாம் இருக்கிறோம் என்ற எண்ணமும், வெட்கமும் தோன்றவேண்டாமா? அப்போதுதானே திருத்தத்திற்கு வழிஏற்படும்?

மேயோவின் "இந்தியத்தாய்" என்ற நூலுக்குக், கண்டனக்கணைகள் சரமாரி! காந்தியார், "சாக்கடைப்பரிசோதகரின் பஞ்சாங்கம்" மேயோவின்புத்தகம்என்று எழுதினார். ஆனால்,மேயோவைத்திட்டிய அளவோடு தேசபக்தர்கள் திருப்திபெற்றனரே ஒழிய, அந்தச்சாக்கடையைப் போக்கினரா! ஒருசிலர், தமது ஆடையிலே, வாசனை பூசிக்கொண்டு, அதேசாக்கடைஓரத்திலேஉலாவிக்கொண்டு மணம் இங்கும் உண்டு என்று பேசிவருகின்றனர்! சாக்கடை அப்படியேதான்இருக்கிறது! நிக்கோலாஸ், அதைத்தான் எடுத்துக்கூறுகிறார். முன்பு கோபித்தது போலவே, இப்போதும்,சாக்கடையைக் கிளறாதே! என்று கூறுவதுதவிற, வேறு என்னகூறமுடிகிறது, கண்டனக்காரரால்!! நிக்கோலாஸ்இந்தக்கண்டனத்தைக் கண்டுதிகிலடையவுமில்லை.எதிர்பார்த்தே எழுதினார்.தமதுபுத்தகத்திலேயே,அதை, பீவர்லி தீட்டியிருக்கிறார்.

"எனக்கு உபசாரமளித்தனர் பலஇந்தியர்; சிறப்பாக இந்துக்கள்! அவர்கள் இந்தப்புத்தகத்திலே ஆரம்பமுதல் இறுதிவரை உள்ளவற்றை வெறுக்காமலிருக்க முடியாது. எனக்கேகூடக்கொஞ்சம் வெறுப்பாகத்தான் இருக்கிறது. என்ன செய்யலாம்! நான் இந்தியாவைப்பற்றி ஏதேதோ எழுதலாம் என்ற பலமான நம்பிக்கையுடன், இலட்சியங்களுடன்வந்தேன். நான்கண்டதோ? அதைக்கூறுவானேன், நீங்களே பாருங்கள் புத்தகத்தை" என்று நிகோலாஸ் முன்னுரையிலேயே கூறியிருக்கிறார், காட்சிகள், கண்றாவியாக இருந்தன, எனவே தீட்டினது அது போலஇருக்கிறது! கோபம் வந்துபயன் என்ன?

அவன் அரசன்! சித்திரக்காரனின் சிறப்புபற்றிக் கேள்விப்பட்டான். அவன் தீட்டிய சித்திரங்களையும்கண்டான்;களித்தான்; சபைக்குஅழைத்துஉபசரித்தான்; தன் உருவைத்தீட்டித்தரச் சொன்னான். ஓவியக்காரன் தீட்டித்தந்தான். கண்ட மன்னன் கடுங்கோபங்கொண்டான்.

"ஏ! சைத்ரீகா! இதுஎன்னகோரமான படம்! முகத்திலே இவ்வளவு அவலட்சணமா இருப்பது? கண் ஒன்று பழுதற்றுக்காணப்படுகிறது. கன்னத்திலேகுழி. தலை,வழுக்கை! முன்வரிசைப்பற்களிலே மூன்றுகாணோம்! இதுஎன்ன ஆபாசமான படம்! உன்னைப்பெரிய சித்திரக்காரன் என்று ஊரெங்கும் புகழ்ந்தார்களே! உன் யோக்யதை இதுதானா? திறமையற்றவனே! ராஜசபைக்கு இவ்வளவுரசாபாசமான படமா தயாரிப்பது?" என்று ஏசினான், வாளை வீசினான். சித்திரக்காரன் சிரித்தான். "அரசே! எனக்கே சிற்சிலசமயங்களிலே சந்தேகம் தோன்றுவதுண்டு, உண்மையிலேநாம், உள்ளதைஅப்படியே தீட்டுமளவு திறமை பெற்றிருக்கிறோமா இல்லையாஎன்று. இன்று அச்சந்தேகம் அறவே நீங்கிவிட்டது. நான் அடைய வேண்டும் என்று எண்ணியதிருப்தி ஏற்பட்டுவிட்டது ஆகவே மரணதண்டனையைமகிழ்வுடன் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால், என்னுடைய கடைசீ வேண்டுகோள் ஒன்று. தயவுசெய்து என்னை வாளால் வெட்டுமுன்னம், தங்கள் உருவத்தை நிலைக்கண்ணாடிமுன் நின்று நீர் ஒருமுறைபார்த்துவிட்டு வாரும்" என்றான். மன்னன், கண்ணாடிமுன்நின்றான், ஒரு கணம்! தலைகுனிந்தான். கூப்பிடு காவலரை என்றான். ஓவியக்காரனை, மன்னித்துவிட்டோம், போகச்சொல் என்றான். படுக்கை அறை சென்றான், படுத்தான்புரண்டான்! தன் உருவம், ஓவியக்காரனின் தீட்டுகோலுக்கு இலாயக்கற்றது என்று தனக்குள் கூறிக்கொண்டான்.

அவலட்சணத்தோடு கூடிய அந்த அரசனுக்கு, ஆத்திரம் பிறந்தது, ஆனால்அறிவு அதனை அடக்கிற்று. தேசியம், தெளிவு தன்னை அண்டச்சகிப்பதில்லை. எனவே தான் பீவர்லிமீது கண்டனம் குவிகிறது.

நிக்கோலாஸ், எழுதியதிலே எவையெவை அபத்தம் என்று விளக்கி விட்டிருப்பின், யாருக்கும் மகிழ்ச்சிஇருந்திருக்கும். அது முடியாதகாரியம் என்பது அறிந்து மௌனமாக இருந்திருப்பின், யூகத்தையாவது பாராட்ட இடமேற்பட்டிருக்

(4-ம் பக்கம் பார்க்க)

## நிகோலாஸ் தீர்ப்பு!

3-ம் பக்கத் தொடர்ச்சி

கும். இரண்டுமின்றி, நிக்கோலாசைத் தூற்றினால், அவன் தீட்டியவிஷயங்களை மறைத்துவிட முடியும் என்று கருதுகிறார்கள்—இது எயாளித்தனம்!

அவன் அமெரியின்கூலி! இது ஒரு தூற்றல்! இருக்கட்டுமே அப்படியே!கூலி வைத்து எழுதாவிட்டாலும், அமெரியே எழுதத்தொடங்கினாலும், நாம் அஞ்சவோ, வெட்கப்படவோகாரணம்இராது, நம்மிடம் அப்பு அழுக்கு இல்லாது இருந்தால்! மடியிலே கனமிருக்கும்போது, வழியிலே பயமேற்பட்டுவிடுகிறது.!என்ன செய்வது?

நிக்கோலாஸ் எழுதுகிறார், ஐயா!நான் அமெரியைக்கண்டதில்லை, அவர் பேசிக் கேட்டதில்லை. அவரோடு கடிதப்போக்கு வரத்துநடத்தியதில்லை என்று. ஆனால்தேசியத்தாட்கள் ஏசலைவிட்டுவிடுமா? பம்பாய் சென்டினல் பத்திரிகை போட்டதாம் ஒருபாணம், வைசிராய் வேலையை ஏற்றுக்கொள்ளும்படி பீவர்லிநிக்கோலாசைக்கேட்டுக்கொண்டது சர்க்கார் என்று! இவ்விதமான அபத்த அஸ்திரங்களை ஏவி என்னபயன்? நிக்கோலாஸ் யாராகவேனும் இருக்கட்டும், நமக்கென்ன கவலை! அவனுடைய மொழி! தீட்டப்பட்டுள்ள தகவல்! விளக்கப்பட்டுள்ளவிஷயம்! பொறிக்கப்பட்டுள்ள புள்ளி விவரம், அவைகளுக்கல்லவா பதில் கூறவேண்டும்! எங்கே அந்தப்பதில்? எப்படிமுடியும் பதிலுரைக்க? இல்லாததை எழுதியிருந்தால்தானே! நிக்கோலாஸ் தான், மறுக்கமுடியாதவைகளைத் தீட்டிவிட்டாரே!

பத்திரிக்கைக்காரர் இப்படிப் பாணம்பலவிடுவதற்கு வேறோர் காரணமும் இருக்கிறது. நிக்கோலாஸ் பத்திரிக்கைக்காரரின், அதாவது இந்துஇன ஆதிக்கத்துக்காகப் பாடுபடும் பத்திரிக்கைக் காரரின், போக்கைத் தாட்சணியமின்றிக் கண்டித்து எழுதிவிட்டார். எனவே, பேனாவீரர்கள் பெருங்கோபம்கொண்டு, நிக்கோலாஸ்மீது பாய்ந்தனர். நிக்கோலாஸ் வந்தநாள் தொட்டு, நிக்கோலாஸ்துதியோ, நீண்டபுராளிகளோ,விசித்திரவதந்திகளோ, தன்னைப்பற்றி அந்த ஏடுகளிலே வெளிவரக்கண்டார், அப்பத்திரிகைகளின் யோக்கியதையை உணர்ந்துகொண்டார். உண்மையை வெளியே உரைத்துவிட்டார். உள்ளதைச் சொன்னால்தான்............! இந்தப்பத்திரிகைகளின் போக்கை பீவர்லி கண்டித்தபோதும், காரணம் காட்டாமலிருக்கவில்லை, ஆதாரம் கூறாதுவிடவில்லை.

இந்தப்பத்திரிகைகள், அமோகமயுகப் புளுகுப்பிரச்சாரத்தைச் சுறுசுறுப்பாகச் செய்துவருகின்றன. உள்ளதை மறைப்பது அல்லது உருமாற்றி உரைப்பது, இல்லாததைக் கூறுவது, ஒன்றை மற்றொன்றாகத் தோன்றும்படிபூசிவிடுவது, குரோதமுள்ள கண்டனம், கண்ணியமற்றகேலி,எதிர்க்கட்சியை ஏளனம்செய்வதிலே எந்தவரம்புக்கும்கட்டுப்படமறுப்பது, ஆகிய திருக்கலியாண குணங்கள் இப்பத்திரிகைகளுக்கு உண்டு என்று எழுதினார். கோபமாகத்தான் இருக்கும்? ஆனால் அவர் குறிப்பிடும் கோணற்சேட்டைகளை, இல்லை என்று யார் மறுக்க முடியும். ஜெர்மன் கெப்பல்ஸ்இதைவிட அதிகமாக அபத்தம் எழுதுகிறாரேஎன்று வேண்டுமானால் கூறலாமேயொழிய,நாங்கள் உண்மைக்கு உயரிடம், உரிய இடமளிக்கிறோம், மனச் சாட்சியின்படி நடக்கிறோம்,அண்டப்புளுகுகூறுவதில்லை அதிர்வேட்டு போடுவதில்லை,எதிர்க்கட்சி நடவடிக்கைகளை அடியோடு மறைத்துவிடுவதில்லை, என்றுஎந்தத் 'தேசியத்தாள்' "பொதுஜன"ப் பத்திரிகை, (நெஞ்சு இருந்தால் கைவைத்துக்) கூறமுடியும்? அந்தப்பத்திரிகைகள் எவ்வளவு கட்டுப்பாடாக, காட்டுமிராண்டித்தனமாக,க் காங்கிரசுக்கு மாறுபட்ட கருத்துடையோரைக் கண்டித்தன—கண்டித்துவருகின்றன. ஒருபெரிய இனத்தின்உரிமைக்காகப் போரிடும் ஜனாப்ஜின்னா, அந்த ஏடுகளிலே, பிரிட்டிஷ்கையாளாக,ஏகாதிபத்திய தாசராக, பதவிப்பிச்சைக் கிண்ணம் ஏந்துபவராகத் தீட்டப்பட்டார். டாக்டர் அம்பேத்கார், பெரியார் ராமசாமி, சர். ராமசாமி, எம். என். ராய், டாக்டர்கரே, நரிமன், யார்மீது பாயாமல் இருந்தன அந்தஏடுகள்? தேர்தல் காலத்திலே, எவ்வளவு திடீர்ப்புளுகுகள்! சர். ராமசாமி முதலியார், தாலி அறுத்தவரானார்!! பெரியார் ராமசாமிநாஸ்திகரானார்! டாக்டர் அம்பேத்கார், ஆதித்திராவிடரைக் காட்டிக் கொடுப்பவரானார், இந்தஏடுகளின் கண்முன்! பீவர்லி நிக்கோலாஸ், அறியார், இப்பத்திரிகைகளின் முழுத்திறமையை. அறிந்தால், அவர் இதற்கே ஒரு தனி புத்தகம் எழுதி இருக்கக்கூடும்!

நிக்கோலாஸ், இப்பத்திரிகைகளின் யோக்கியதையைத் தமக்கு நேரிட்டஒரு அனுபவத்திலிருந்தே தெரிந்துகொண்டார். அவர்தமது புத்தகத்திலே குறிப்பிடும் ஓர் எடுத்துக்காட்டு, இப்பத்திரிகைகள் புளுகுப்பிரசாரத்தை எவ்வளவு தந்திரமாகச் செய்கின்றன என்பதைமிக விளக்கமாகக் காட்டுகிறது. நிக்கோலாஸ் நோய்வாய்ப்பட்டிருந்தார். இந்தியவைத்தியர்களும் சிகிச்சை செய்தனர். அவர் களைப்பாராட்டியும், பொதுவாகத்தமக்கு நேரிட்ட நோய்பற்றியும் ஒரு கட்டுரை அனுப்பினார் பிரிட்டனுக்கு. அக்கட்டுரையை, இந்தியாவிலே சில பத்திரிகைகள் வெளியிட்டன, அப்படி வெளியிட்டபோதுதான், தங்கள் யோக்கியதையை வெளிப்படுத்தி விட்டன. நிக்கோலாஸ் தமதுகட்டுரையின் இறுதியில், "இந்திய மருத்துவத்துக்கு எதிர்காலத்திலே நல்ல கிராக்கி இருக்கிறது, அது அபிவிருத்தி அடையவேண்டும், ஆங்கிலேயரால் மட்டுமல்ல. இந்தியராலேயே அந்த அபிவிருத்தி ஏற்படவேண்டும்" என்றுஎழுதியிருந்தார். அதாவது, ஆங்கிலர் இந்தியர் இருவரும் அந்த அபிவிருத்திக்குஉழைக்க வேண்டுமென்ற கருத்தைவெளியிட்டார். ஆங்கிலத்திலே அவர் எழுதியது இது.

"There is a great future for Indian medicine. provided that it is allowed to develop freely, not only by the British but by the Indians themselves" இக்கட்டுரையை வெளியிட்ட இந்தியப்பத்திரிக்கைகள் என்னசெய்தன? ஒரே ஒரு பதத்தை விழுங்கிவிட்டன! அதன்விளைவு என்ன? நிக்கோலாஸ் எந்தக்கருத்தோடு எழுதினாரோ அதற்குநேர்மாறாகக்கருத்து தொனித்தது, அதன்பயனாகநிக்கோலாஸ் மீது பழியும் பிறந்தது. சந்தைக்கடையிலே சன்னக்கத்தரிக்கோல் வைத்திருப்பவன், அதிகச்சிரமப்படுவதில்லை; ஒரு சிறுவெட்டு! ஆனால் நடப்பதுஎன்ன? மணிபர்ஸ் காணாமற்போகும்! பாம்பு, கர்ஜனை செய்துகொண்டு, முன்னாலும் பின்னாலும் தாவிப்போர்முழக்கம் செய்வதில்லை. மெள்ளநகர்ந்துவந்து,தன்பல்லை வைத்து அழுத்தும்! விளைவு? மரணம்! அதுபோல, இப்பத்திரிகைக்காரர், அதிகக்கஷ்டப்படாமல், ஒரே ஒருபதத்தை, நிக்கோலசின் வாசகத்திலிருந்துநீக்கிவிட்டனர், அதன்விளைவு, அவர் எதைக்கூற எண்ணினாரோ அதற்குநேர்மாறு! இந்த வெட்டு ஒட்டுவேலையிலே, இப்பத்திரிக்கைகளுக்கு இணைகிடையாது. தவலை போயிற்று, என்று எழுதுவதற்கு ஒரு தற்குறி வ என்ற எழுத்தை மறதியால் விடுத்ததன்பலன், கடிதத்தைப்பெற்றவர்கள் தலைபோயிற்று என்றுஎண்ணிக்கோவெனக்கதறநேரிட்டது. அதுதற்குறித்தனத்தின் விளைவு. இது தந்திரத்தின் முதிர்ச்சி; வேண்டுமென்றே பொருளை வேறாக்கும் நோக்குடன், ஒருபதத்தை நீக்கிவிடுவது. ஆங்கிலேயர் மட்டுமல்ல, இந்தியரும் அபிவிருத்திக்கு வேலைசெய்ய வேண்டும் என்று எழுதினாரல்லவா நிக்கோலாஸ்,இதிலே, இந்தியப்பத்திரிகைக்காரர், ஆங்கிலேயர் மட்டும்அல்ல, என்ற தொடரிலே மட்டும் என்ற பதத்தைமட்டும் நீக்கிவிட்டனர்.நீக்கிப்பாருங்கள், நிக்கோலாஸ் கூறியதற்கும் நிக்கோலாஸ் கூறியதாக இவர்கள் வெளியிட்டதற்கும் உள்ள மாறுபாடு தெரியும். அவர் ஆங்கிலர்மட்டுமல்ல என்றார், இவர்கள் ஆங்கிலர் அல்ல, இந்தியர் அபிவிருத்திசெய்ய வேண்டும் என்று வெளியிட்டனர்,

Not only by the British என்ற ஆங்கிலச்சொற்றொடரிலே only என்ற பதத்தை எடுத்துவிட

(10-ம் பக்கம் பார்க்க)



## ஆறும்படை

கிழக்கு, மேற்கு ஆகிய இருபோர் முனைகளிலும், ஜெர்மன்படை திண்டாடிக்கொண்டுதான் இருக்கிறது. ரூண்ஸ்டெட் எனும் ஜெர்மன் தளபதி ஆரம்பித்த தாக்குதல் அவலமாகிவிட்டது. ரைன் அணிக்குச்சென்று ஜெர்மன்படை பதுங்கப்புது ஏற்பாடு நடைபெறுகிறதாம். இதல்லாமல், தோல்விக்குப்பிறகு, தொல்லைதருவதற்காக, "ஆறும் பட்டாளம்" தயாராகிறதுஎன்றும் ஆயிரக்கணக்கான ஜெர்மானியர் இதற்கான பயிற்சி பெற்று, நேசநாடுகளின் கைவசமாகும் இடங்களிலே இடர் விளைவித்து, மூன்றாவது உலகப்போர் மூட்டிவிட வேலை செய்வர் என்றும் "பிராவ்டா" எழுதுகிறது. நேசவிமானங்கள் ஜெர்மன்நகர்களை நொறுக்கிவரும் நேரத்தில், சோவியத்படையின் சோர்வில்லா முன்னேற்றமும், நேசப்படையின் யூகமான தாக்குதலும் நடைபெற்றுவரும் இந்த நேரத்தில், ஜெர்மன்பிரச்சாரமந்திரியின் தந்திரப்பேச்சுமட்டும், பழைய பல்லவியாகவே இருக்கிறது. விசாரம் வேண்டாம், உயிருக்காகப் போரிடுக, என்ற உற்சாகமும், வி. பாம்களைக்கொண்டு பிரிட்டனை ஒழித்துவிடுகிறோம் என்ற வெறிக்கூச்சலும் கெப்பல் சின்சொந்தச் சொத்து, ஜெர்மனியில் தயாராகிவரும் ஆறும் பட்டாளத்தின் ஆபத்தான சேஷ்டைகளை ஜாக்ரதையாகக் கவனித்து வரும்படியும், உணவிலே விஷம் கலப்பது, பின்புற மிருந்துதாக்குவது, ஆயுதத்தை அழிப்பதுபோன்ற காரியங்களை ஆறும்படை செய்யக்கூடுமென்றும்,சோவியத் சேனை,இதுபற்றிச்சர்வஜாக்ரதையாக இருக்கவேண்டுமென்றும்மாஸ்கோ ரேடியோ எச்சரித்திருக்கிறது.

## திருவிளக்கு

மூவர் மாநாட்டு முடிவுபற்றி முதலமைச்சர் சர்ச்சில் பிரிட்டனிலே ஆற்றிய பேருரை, வரலாற்றுச்சுவடியிலே இடம் பெறக்கூடியதாக இருக்கிறது.நம்பிக்கை நாதம்நிரம்பிய அச்சொற்பொழிவிலே, ஜெர்மனிக்கு இறுதி எச்சரிக்கையும், போரில் சிக்கித்தவிக்கும் நாடுகளுக்கு ஆறுதல் மொழியும்,அழகாகத்தொடுக்கப்பட்டிருக்கிறது. போலந்துதகரூர்பற்றி, மூவரசுமாநாடு செய்த முடிவுகள்பற்றிய விளக்க உரை, காலமறிந்ததீர்ப்பாகவும், கண்ணியமான சமரச மார்க்கமாகவும், சோவியத்துடன் தோழமை கொள்ள வேண்டும் என்ற சுருதிஇலயம் பொருந்தியதாகவும் இருக்கிறது. எல்லைக்கோடுகள் திருத்தி அமைக்கப்படுவதன் நோக்கத்தை எடுத்துக் காட்டி,சுதந்திரப்போலந்து சுகப்பட வேறு மார்க்கமில்லைஎன்பதை முதலமைச்சர் சொல்லியிருக்கிறார். ராஜதந்திரப் போராட்டம் நடைபெற்று, சோவியத்தும் பிரிட்டனும், இன்றுகொண்டுள்ள நட்பைக்கெடுத்துக் கொள்ளவேண்டும்என்றநபடக் கருத்துக்குஇடமளிக்கமறுக்கும்எவரும்,இன்றைய போலந்துக்கு இதைவிடச்சிறந்த முறை கிடைக்காது என்பதை அறிவர். போலந்தைப்பறிக்கும் நோக்கம் எமக்கு இல்லை என்று ஸ்டாலின் சொன்னார்.அவர்வார்த்தை, போதும், அது சாசனத்துக்குச் சமம்என்று சர்ச்சில்கூறினது,சோவியத்திடம் இன்னமும்சந்தேகம்கொண்டுள்ள சிலரின் மண்டைக்கர்வத்தைத்தகர்க்கும் சம்மட்டி அடியாக இருக்கிறது. மனித சமுதாயம் மாண்புடன்வாழ, வழி தெரிகிறது, இதுவரை வகுக்கப்பட்ட வழிகளைவிட மிகச்சிறந்தபாதை இது. திருவிளக்கு வழி விளக்குகிறது, சேரீர் ஒன்றாகச் செல்வோம் சீர்வழி,—என்றுமுதலமைச்சர் உலகை அழைக்கிறார். உவகையுடன், உறுதிகலந்த நம்பிக்கையுடன், உற்சாகத்துடன்.

## யால்ட்டா-ஒருவிளக்கம்

• ஐரோப்பிய, கீழ்க்கோடிப்போர்களை முன்னேற்றமும், தற்போதுவெளியாகியுள்ள அளவுக்கு யால்டா மகாநாட்டின்பலன்களும் பொதுமக்களின் கவனத்தைச்சமமாகச்கவர்ந்து வருகின்றன.

மகாநாட்டிற்குப்பிறகுசர்ச்சில்காமன்ஸ் சபையில் பேசியபோது "வெளிநாட்டு விவகாரங்கள் முன்னைவிட தேவலை" என்று குறிப்பிட்டார்.அடக்கத்துடனும் ஜக்கிரதையாகவும் கூறப்பட்டஇந்த அறிவிப்பு நேசநாட்டுப் பொதுஜன அபிப்பிராயத்துக்கு யால்டா மகாநாடு மீண்டும் ஊக்கமளித்து விட்டதென்று பொதுவாக இருந்துவரும் கருத்தை ஊர்ஜிதம்செய்வதுடன் யுத்தத்துக்குப்பிறகும்நேசநாடுகளிடையேஒத்துழைப்பு இருந்துவரும் என்ற நம்பிக்கையையும் பலப்படுத்திவிட்டது. போலந்து விஷயமாகக்ரைமியாவில் செய்யப்பட்ட முடிவுகளை லண்டனிலுள்ள போலந்து சர்க்கார் உதறித்தள்ளியது ஒன்றுதான் சற்றுக்குறைப்படத்தக்கவிஷயம்.

மற்ற இருநாடுகளின் தலைவர்களை மத்தியக்கிழக்கில் அவர் சந்தித்துப் பேசியதன் முக்கியத்துவத்தை உணர்ந்துள்ள பிரிட்டிஷ் பொதுமக்கள், யுத்தத்தின் விரிவான பிரச்சினைகள்பற்றியும் சமாதானம் எப்பொழுதுஏற்படக்கூடும் என்பது பற்றியும் தகவல்கள் தெரிந்து கொள்வதற்கும் அதிக ஆவலுடனிருக்கிறார்கள்.

ஜெர்மனியின் எதிர்க்கும் சக்தி,கிழக்கிலிருந்து வரும் ரஷ்யத்தாக்குதல்களாலும், மேற்கிலிருந்து வரும் நேசத்தாக்குதல்களாலும் மேலும் அதிகமாக அழிக்கப்பட்டாலொழிய, ஐரோப்பியப்போர் இன்னும் எவ்வளவு காலம் நடக்கக்கூடுமென்று ஜோசியம் கூறுவதற்கில்லை.சிற்சில இடங்களில் ஜெர்மன் எதிர்ப்புஇன்னமும் பலமாகவே இருக்கிறது. வேறுபல இடங்களில் ஜெர்மன் ஆபீஸர்களும் துருப்புகளும் சரணடைந்துவருகிறார்கள். ஜெர்மனியின் உள்நாட்டிலேயோ, சரணாகதியை எவ்வளவுக்கெவ்வளவு ஒத்திப்போடுகிறார்களோ, அவ்வளவுக்கவ்வளவு அவர்களுடைய கதியும் அதோகதியாகிவிடும் என்பதை நேசவிமானங்கள் ஜெர்மன் மக்களுக்கு நிதரிசனமாகக் காட்டி வருகின்றன.

ஜப்பானின் நிலைமையும் இதற்குஒன்றும் குறைந்ததாக இல்லை. மணிலாவையும் அவர்கள் இழந்து விட்டதைக்கவனிக்கும்போது. ஜப்பானியத் தாயகத்தின் தற்காப்புகள் ஓயாமல் நடக்கும் நேசத்தாக்குதல்களை அதிகநாள் சமாளிக்கமுடியுமா என்ற சந்தேகம் உண்டாகிறது.

அமரிக்கப் போர்க் கப்பல்களையும் விமானந்தாங்கிக் கப்பல்களையும் ஜப்பானியர் எதிர்க்க முன்வாராதது' அவர்கள் வசம்கடல் விமானரிஸர்வ்படைகள் அதிகமில்லைப் போலிருக்கிறது.என்றசந்தேகத்தையே உண்டுபண்ணுகிறது. ஜப்பானுக்கு 700 மைல் தூரத்திலுள்ள இவாஜிமாஎன்றதீவில் அமெரிக்கப் படைகள் வெற்றிகரமாக இறங்கியிருப்பது இந்த சந்தேகத்தை மேலும் ஊர்ஜிதப்படுத்துகிறது. வானத்திலும் கடலிலும் ஜப்பானியத்தாயகமே சூடிடப்பட்டுவிட்டால் சீனாவிலும் ஆசியாவிலும் ஜப்பானியரின் நிலைமை படுமோசமாகிவிடும்.

### யுத்தம் எப்போது முடியலாம்?

ஜெர்மனி முறியடிக்கப்பட்ட பிறகு வெகுநாள் வரை ஜப்பான் எதிர்த்துப் போர் புரியக்கூடுமென்று முன்புஇருந்துவந்த அபிப்பிராயம் இப்பொழுது மாறிவிட்டது. ஆறுமாதத்திற்குமுன்பு எதிர்பார்த்ததைவிட அதிசீக்கிரமாகவே இரண்டு யுத்தங்களும் முடிந்து விடும் என்ற நம்பிக்கை வளர்ந்து வருகிறது.

இதுகாரணமாகச்சமாதானப் பிரசினைகள்அவசரமாகக்கவனிக்கப்படவேண்டும்

(8-ம் பக்கம் பார்க்க)

திராவிட நாடு.

காஞ்சி 4—3—45 ஞாயிறு

# சண்முக சம்வாதம்!

தூ! தூ! போ! நாயே!

இனியகுரல்! எடுப்பான இசை! ஆனால் பாடியதோ, மன்றிலுள்ளவரை மமதையுடன் கேவலப்படுத்தும் தூற்றலாக இருந்தது. ஏன் இராது? ஒரு இசைவாணன், சபையினர்முன், தூ! தூ! போ! நாயே! என்று, பாடினால், இசையின் இனிமைக்காகப் பொறுமையுடன் கேட்போர் எவ்வளவுபேர் இருக்கமுடியும்? சபைவிறைத்துப்பார்க்கக்கண்டார்! சுருதிகலையவில்லையே! தாளமும் தவறவில்லையே! தமிழர்விரும்பும்தமிழ் இசைதானேபாடுகிறோம்! ஏன் முகம்கடுக்கிறது, விழிகோபத்தைக்கக்குகிறது என்று விசாரமடைந்தார் வித்வான். ஆணவம்பிடித்தவன் என்றுசபையினர்கருதினர், சங்கீதஞான மற்றவர்கள் என்று இசைவாணர் கருதினர். இரண்டாம்அடிபாடும்போதுதான், கோபத்துக்குப்பதில் சபையினர் சிரிக்கலாயினர், விசாரத்துக்குப்பதிலாகவித்வான், வெட்கப்படலானார். இந்த மனமாறுதலைத்தந்த, அந்த மகத்தான இரண்டாம் அடிஎது? ஆதிநாள் சுந்தரர்க்கு அன்புடனே!

என்ற அடிபாடியபோதுதான், தூற்றல்அல்ல இசைவாணர் பாடியது, தோத்திரம் அதுஎன்பதைச் சபைஉணரவும், தூது போனாயே! என்றமுதலடியை, வித்வத்துவத்தை விளக்கவேண்டும் என்ற காரணத்துக்காக, நிறுத்தி, நிதானமாக, நிரவல்செய்து, எழுத்தெழுத்தாக்கி, தூ-தூ-போ-நாயே! என்று பாடி, பாசுரத்தின் பொருளையேபாழாக்கிவிட்டோமே, அதனாலன்றோ சபையினருக்கு நம்மிடம் ஆத்திரமேற்பட்டது என்று இசைவாணர்உணரவும் முடிந்தது. ஆதிநாளில் சுந்தரருக்குத் தூதுபோனாயே! என்று ஆரம்பமாகும் தோத்திரப்பாடலைப் பாடுகையில், இசை இலட்சணத்தைமட்டுமேகாட்டினால்போதும், பொருள் பற்றியகவலையும்வேண்டாம், என்றுஎண்ணிய இசைவாணரின் இடர், கலைஉலகிலேமட்டுமில்லை, அரசியல்உலகிலும் இருக்கிறது!!

சர். சண்முகம், ஒரு நிபுணர்! நமது தலைவராக இருக்கஅவர்மறுக்கிறார்என்றாலும், அவருடைய தகுதி பற்றியும் இனம்பற்றியும் அவரைத் தலைவராகக்கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தை எண்ணற்ற தமிழரின் உள்ளத்திலே பெய்த, பேராற்றல் வாய்ந்தவர். அவர் சென்னைப்,பல்கலைக்கழகத்தின்ஆதரவிலே ஆற்றியஓர்உரையிலே, அரசியல் சாஸ்திரத்தின்இலட்சணவிளக்கம் ஆற்றினால்போதும்,அது,காலத்தையும் இடத்தையும் பொருத்திப் பார்க்கும்போது, பொருளுள்ள உரையாக இருக்கிறதா இல்லையா என்பதுபற்றிய கவலை வேண்டாம் என்ற கருத்துடன் பேசியிருப்பதைப்படிக்கும் (துர்ப்) பாக்கியம் நேரிட்டபோது, நமக்குத்தூதுபோனாயே என்றதுதியைத்தூற்றல்போலத்தோற்றும்படிபாடிய இசைவாணர்பற்றிய எண்ணம்வந்தது. புன்சிரிப்புப்பிறந்தது! மறுகணமோ, பெருமூச்சு! ஏன்? இனியகுரல், எடுப்பானபாட்டு, இருப்பினும் பொருள் விளங்கப்பாடவேண்டும் என்ற சாமான்ய விஷயமுணராத இசைவாணரின்நிலையிலேகோவைக் குமரன்,திராவிடத்திருமகன், இருக்கும் காலமும்வந்ததேஎன்பதுநமது கவலை.

சர். சண்முகம், அரசியல்கோட்பாடுகளைஅலசிக்காட்டி, ஆராய்ச்சி நிரம்பிய உரையாற்றினார். ஆம்! அழகுமிளிருகிறது, ஆனால் மணமில்லை, காகிதப்பூவாகஇருப்பதால். மேதாவித்தனம் அவருடைய சொற்பொழிவிலே மிதக்கிறது, ஆனால் இனத்தின் இருதயகீதமாக இல்லை!

இந்தியாவிலே இன்னல் பல! சுயாட்சிக்குத்தடைபலப்பல! எடுத்தகாரியங்களுக்கு இடர் மிகப்பல! வகுப்புப்பூசல்! பாசீசக்காய்ச்சல்! காங்கிரசின் ஏசல்! என்ற இன்னோரன்னவற்றைக்கூறினார். பிறகட்சிகளைப்'பிடிசாபம்' என்று மிரட்டிய பாசீசக்காங்கிரசின், ஆட்சியின் அலங்கோலத்தைச்சாடினார்.நாட்டு நலிவு போகமார்க்கம் யாது எனத் தேடினார்! பாட்டிதரும்பழயகஷாயமேபோதும் என்ற முறையிலே மார்க்கம் காட்டினார்!

இந்தியாவிலே, மேனாட்டுஅமைப்பான, கட்சிஅரசியல் கூடாதுஎன்றார். குடிஅரசுக்கோட்பாடு, இங்கு அப்படியேகுடிபுகுந்தால்பலனில்லை என்றார். சரி! காங்கிரசிடம்கண்ணியம் இல்லை! கட்சிஅரசியல் முறையிலேபலன்இல்லை! இடர்மிகுவதன் காரணமோஜாதித்தொல்லை!-இவை, உண்மை! ஆனால்,இந்தநோய்போகஜனாப் ஜின்னா கேட்கும்பாகிஸ்தானமும், பெரியார் இராமசாமி கேட்கும் திராவிடநாடும், அமைக்கப்படுவது, சிறந்த முறையன்றோஎன்றால் இல்லை! இமயமே நமக்கு எல்லை! நாட்டைத்துண்டாட மனம் இடந்தரவில்லை! என்றபழையபாடலைக்கூறிவிட்டு, மத்திய சர்க்காரிலேயும் மாகாணசர்க்காரிலேயும் கூட்டுமந்திரிசபைகள் அமைத்திடலாம், கட்சிகளின்பேரால் பிரதிநிதிகள்அனுப்பப்படும் முறையிலேமாறுதல்களைப் புகுத்தலாம், இனஅரசுகள், பாகிஸ்தான், திராவிடஸ்தான் போன்ற அமைப்புகள் கூடாது, ஆகாது!— என்றுகூறிவிட்டார். பாகிஸ்தானைவிடப்பதவிஸ்தான் கவர்ச்சிதருவதுதான்! பசையும் ருசியும் உள்ளதுதான்! தனிப்பட்டவரின் தகுதியின் பரிசுப்பொருளாக்கப்படக்கூடியதுதான்! துரைமார்களின்தோழமைக்கு அடையாளச்சீட்டுத்தான்! ஆனால் ஒரு இனத்துக்கு! ஒருஇலட்சியத்துக்கு! பதவிஸ்தான் அல்ல, பாகிஸ்தான்மட்டுமே, நம்பிக்கையை, எழுச்சியை, திருப்தியைத் தரும். இனம், இடம்கேட்கிறது, வாழ, கண்ணியத்தோடுவாழ! இதைமறுத்துவிட்டு, இங்கும் அங்கும் பதவி என்றுகூறுவது பொருந்துமா, பொருள்உள்ளதுதானா! நாம், அஞ்சுகிறோம். அவர் அறிஞர், ஆனால் சிலபலகாலமாகப் பொதுமக்கள் தொடர்புஅற்றுஇருப்பதால், அவர் அந்தத்தவறிலே தவறிவீழ்ந்திருக்கிறார் என்று கூறுகிறோம்.

"இனமா?—ஏதய்யா இனம்! எல்லாம் கலந்துகதம்பமாகிவிட்டது!" —இதையுமா சர். சண்முகம் கூறவேண்டும்! அதுதான், பாரதமாதாவின் பள்ளியிலே பாலபாடமாயிற்றே. காங்கிரஸ்தலைவர்களே இப்போது, அந்தப்பாலபாடம்போதாதுஎன்று, மேல்படிப்புக்குவந்து சேர்ந்துவிட்டார்களே, பரணிபாடி தரணிசுற்றும் நமது சண்முகமா, இந்தப்பாலபாடத்தைப் படித்துக் காட்டவேண்டும்? ஜாதி—மதம்—மொழி—கலை—என்ற இயல்புகளிலே, ஒன்றுபட்டு இருக்கும்மக்கட்கூட்

டத்துக்கே இனம் என்ற பெயர் பொருந்தும், என்கிறார் சர்! ஆம்! அதுதான், ஏடுகூறுவது! ஏடு, நெடுநாளைய எண்ணத்தின் இருப்பிடம்! அதை மறவாதிருப்பது, மேதாவிகளுக்கும் அவசியம் என்று கருதுகிறோம். அரசியல்கோட்பாடுகளிலே, ஆதிநாள் கோட்பாடு, ஒரு இனமென்றால், ஒரே ஜாதி, ஒரே மதம், ஒரே கலாசாரம், ஒரே மொழி, கொண்ட கூட்டத்துக்கே இனம் என்று கூறலாம், என்பது. இம்முறையிலே பார்த்தால், முஸ்லீம் ஒரு இனமல்லவே! ஒருமதந்தானே அதன் அடிப்படை! பலஇனம், பலமொழியினர்கொண்ட கூட்டமாயிற்றே!—என்று சர். சண்முகம், பாலபாடபோதனை செய்கிறார்.

நாமல்ல இப்போதுவாதிடப்போவது! குடிஅரசுக்கோட்பாடுபற்றிப் பேசும் சர். சண்முகம், இனத்தின் இலட்சணவிளக்கமாற்றும் சர். சண்முகத்துடன், இதோ வாதாடுகிறார், கேளுங்கள்.

சர். சண்முகம் நம்பர் (1)

மேனாட்டுக் குடிஅரசு அமைப்புமுறை இந்நாட்டுக்குப்பொருந்தாது! ஏனெனில், இந்நாட்டுமக்களிடை நானாவிதமான ஜாதித் தொல்லை. எனவே, அரசியல் கோட்பாடுகள், வகுப்பைஒட்டி வளருகின்றன. இந்நிலையிலே, மேனாட்டிலே, குடிஅரசு முறை அமைக்கப்பட்டிருக்கிறபடி, ஆளுக்கொருஓட்டுஅதிகப்படியான ஓட்பெறுபவர் ஆட்சிமன்ற உறுப்பினராகலாம்! எந்தக்கட்சிக்குஅதிக உறுப்பினர்கள்கிடைக்கின்றனரோ அந்தக்கட்சியே, மந்திரிசபை அமைக்கும்! சிறுபான்மையான உறுப்பினரைப்பெற்றகட்சி, எதிர்க்கட்சியாக இருக்கும்—என்ற இந்தமேனாட்டுமுறையை இங்கே புகுத்தினால், அரசியல்நீதி கிடைக்காது, பாசீசக் கொடுமையேவளரும், காங்கிரசின் ஆட்சியிலே இதனைக்கண்டோம். ஆகையினாலே, இங்கு, பெருவாரியான உறுப்பினரைப் பெறுகிறகட்சியே அரசாளும் என்ற முறை (Majority Rule) பொருந்தாது. பலகட்சிகள், இலட்சியங்கள், வகுப்புகள், ஆகியவற்றுக்கு இடமளிக்கக்கூடிய முறைவேண்டும், கூட்டு அமைச்சுமுறையே தேவை!

இது சர். சண்முகம், (நம்பர் 1,) வாதம்!

இதைக்கேட்டதும், அரசியல் ஏடுகளிலே, குடிஅரசக்கோட்பாடு பற்றி (Democracy)ப்படித்திடும், கல்லூரிமாணவர், அவர் அறிந்த அத்தனை ஆசிரியர்கள்மீதும்ஆணையிட்டு, Bryce-Strong-Sidgwick-Laski. எனும்பலப்பல கனமானபுத்தகங்களைவீசிச்சற்றுக்கோபமாகவேகேட்பார், "இவ்வளவு ஏடுகளும், குடிஅரசின் சூட்சமமே, உயிர்நாடியே, Majority Rule, பெரும்பான்மையினர் ஆட்சிஎன்று, முறையிடுகின்றனவே, அதுகூடாது, இந்நாட்டுக் குடிஅரசு, ஓட்பலம் பெறாத நிலையிருப்பினும், (ஒரேகட்சி ஆளவேண்டும்என்ற தத்துவத்தைமாற்றி) பல கட்சிகளின் கூட்டாகவே, இருத்தல் வேண்டும் என்றுகூறுகிறீரே, கோபியாதீர், இவ்வளவு அறிஞர்களும், எந்தவகையிலே, தங்களால்மறுக்கப்படக் கூடியவர்கள்!" என்று கேட்பர்.

சர். சண்முகம் (நம்பர் 1) கூறுவார், புன்சிரிப்புடன், "தம்பீ! ஏடுகளிலே உள்ளவற்றை, நாட்டோடு பொருத்திப்பார்த்தே, அவைநடைமுறைக்கு ஏற்றனவா, அல்லவா என்று ஏற்றுக்கொள்ளவேண்டும். படிப்புக்கும் தெளிவுக்கும் உள்ள மாறுபாடு, இதிலேதான்விளங்கவேண்டும். குடிஅரசு இப்படிஇப்படி இருக்கவேண்டும்என்று சிலஇலட்சணங்களை, மேனாட்டினர், தங்கள் சமுதாயத்தைமட்டுமே, நினைவிலே இருத்திவகுத்தனர். இங்குள்ளநிலை வேறு! எனவே, ஏடுகூறுவதைஎடுத்தாளும்போதுநமதுநாட்டுக்குஏற்றவிதமாகத்திருத்திக் கொள்ளலாம். குடிஅரசுக்குநாம் ஏன், புதுப்பொருள், காலத்துக்குஏற்றகருத்துத்தரக்கூடாது, நமக்குஅந்தஉரிமை இல்லையா?" என்று கேட்பார்.

சர். சண்முகம் (நம்பர் 1) சம்பிரதாய அரசியல்கருத்தைக் குடிஅரசு கோட்பாடு பற்றியபோது, தைரியமாகக்கைவிடுகிறார். ஆனால் சர். சண்முகம் (நம்பர் 2) இனத்தின் இலக்கணம் உரைக்கும்போது மட்டும், சம்பிரதாயக்கருத்தைக்கைவிட மறுக்கிறார். குடிஅரசுச் சண்முகம் (நம்பர் 1) இனஅரசுமறுக்கும்சண்முகத்துடன் (நம்பர் 2) ஓய்வான நேரத்திலே, வாதிடவேண்டுகிறோம்!

குடிஅரசுக் கோட்பாட்டுக்குப் புதுப்பொருளும், அந்த அமைப்புமுறைக்குப்புதுத் திருத்தமும், தருவது எவ்வளவு சரியோ, அந்தஅளவுக்கும், அதற்குச்சற்று மேலேயுங்கூட, இனம்என்பதற்கு, முன்னாள் ஏடுகள் தீட்டிடும் இலக்கணத்தை இந்நாள் நிலைக்குஏற்பவும், இந்நாட்டுத்தன்மைக்குத் தக்கபடியும், மாற்ற, புதுப்பிக்க, சர். சண்முகம் உரிமைபெற்றிருக்கிறார், அதை அறியாது இழக்கிறார்.

இனப்பிரச்னையின் உயிர்நாடி, இதுபோது "கூட்டு உணர்ச்சி" என்று கூறலாம்! முன்னாளிலே, வாழ்ந்தோம், இன்னாள் இடர்ப்பட்டோம், நாமார்க்குங்குடியல்லோம் என்றஎழுச்சி, ஏற்பட்டுவிடுமானால், அந்தஎழுச்சியிலே, இசைந்துவிடும் மக்கட்தொகுதி, ஒருஇனமாகிறது! இரத்தக்கலப்பு, ஓராட்சியின் கீழ் குடிஇருந்தவரலாறு, இவைகள், இந்தஎழுச்சியின் முன்புதலைகாட்ட முடியாது. இன்றுபாகிஸ்தான், திராவிடஸ்தான், இத்தகைய எழுச்சிக்கீதமேயாகும். இந்தக்கீதவிளக்கத்துக்குச்சில கூறுகிறோம்,

‡ மொழி, உடை, ஊண் முதலியவற்றில் ஒற்றுமை யிருப்பது ஒன்றுமட்டுமே ஒரே ஜாதியார் (a Singie nation) என்பவர்கள் வளர்வதற்குரியநிச்சயமான அடிப்படையாய்த் தோற்றவில்லை.

‡ "பிரெஞ்சுக்காரரும் இத்தாலியரும் இரத்தக் கலப்பாலும், கலையாலும், மதத்தாலும் இணைக்கப்பட்டிருக்கிறார்கள்," என்று பானே என்பார் (M. Bonnet) வரைந்திருக்கிறார்;

‡ போர்ச்சுகேஸியரும் ஸ்பானியரும் ஒரே மூலத்தினின்று தோன்றிய மக்களாகவும், மூன்று பக்கங்களில் இயற்கையாயுள்ள கடலெல்லைகளாலும் நான்காவது பக்கத்தில் மலைத்தொடராலும்சூழப்பெற்று நிற்கும் ஒரே தேசத்திலே வாழ்பவர்களாகவும், ஒரே மூலத்திலிருந்து தோன்றியுள்ள சகோதர மொழிகளையே பேசுகிறவர்களாகவும், 800 ஆண்டுகளுக்கு மேலாக முஸ்லிம் ஆட்சியின் கீழே வாழ்ந்து வந்த ஒரே பொதுவான பழங்காலச் சரித்திர ஐதிகத்தை வாய்க்கப்பெற்றவர்களாகவுமே யிருந்து வருகிறார்கள். இவ்விரு ஜாதியார்களும் மதத்தால் ரோமன் கத்தோலிக்கர்களாயிருந்துகொண்டு ஒரேவிதமான பொதுச் சமூகப் பழக்க வழக்கங்களையும் பின்பற்றிக்கொண்டு, தங்களுக்குள் பொதுவான பொருளாதார அபிலாஷைகளையும் அபிவிருத்தி செய்துகொண்டு வந்திருக்கிறார்கள். எனினும், அவ்விருவரும் ஒரே ஒற்றுமையுள்ள தேசிய அரசாங்கத்தை உண்டுபண்ணிக்கொள்ளவில்லை.

‡ மக்கள் தமக்குரியபண்டைச் சரித்திரப் பெருமையையும் எதிர்காலவாழ்க்

(8-ம் பக்கம் பார்க்க)

## சண்முக சம்வாதம்!

7-ம் பக்கத் தொடர்ச்சி

கையின் மேன்மையையும்நன்குணர்ந்து கொண்டு, தங்களை ஒரு தேசத்தை ஆளக்கூடியமக்களாய்ஆக்கிக்கொள்ள வேண்டுமென்னும் ஆர்வத்தை அபிவிருத்தி செய்துவிடுங்கால், அவர்கள் ஒரு நேஷனாக உயர்ந்துவிடுகிறார்கள்.

‡இந்துக்களும் முஸ்லிம்களும்இரண்டு வித வேவ்வேறுவகைப்பட்டமதக்கொள்கைகளையும், சமூகப் பழக்கவழக்கங்களையும், கலைகளையும் வாய்க்கப் பெற்றவர்களாயிருக்கிறார்கள். இவர்கள் ஒருவரோடொருவர் விவாக சம்பந்தம் வைத்துக்கொள்வதில்லை; சமபந்தி போஜனமும் செய்வது வழக்கமில்லை; உண்மையிலே இவர்கள் இரண்டுவிதவேவ்வேறுவகைப்பட்ட நாகரிகங்களை யுடையவர்களாய் இருக்கிறார்கள்; அந்நாகரிகங்களிரண்டும் முக்கியமாக முரண்பட்டுள்ள கொள்கைகள்மீதும்நோக்கங்கள்மீதுமேஅஸ்திவாரமிட்டு அமைக்கப்பட்டிருக்கின்றன.

‡ இவர்களுக்குரிய பெருங்காப்பியங்கள் வெவ்வேறாயிருக்கின்றன; இவர்களுடைய வீரர்களும் வெவ்வேறாகக்காணப்படுகின்றனர்;இதிகாசக்கதைகளும்வெவ்வேறாகவே முரண்பட்டுக்கிடக்கின்றன. அநேக சமயங்களில் ஒரு ஜாதியாரின் வீரன் மற்றொரு ஜாதியாரின் விரோதியாய்க்காணப்படுகிறான்.

சர். சண்முகம், தமக்கு இருக்கும், அரசியல்ஆராய்ச்சித்திறத்தை விளக்கப்பல்கலைக்கழகத்திலே அதுபோலப்பேசி,பிரிவினை கூடாது என்று, பாடிவிட்டார்போலும்!நாம் குறிப்பிட்ட இசைவாணரின் முதலடிபோல, இச் சொற்பொழிவு அமைந்து, இரண்டாம் அடியிலே விளக்கம்வெளிவந்ததுபோலச் சர். சண்முகமும், இதுபோது,

பிரிவினை கூடாது என்ற முதலடியைப்பாடிவிட்டார், கேட்டவர் செவிக்கு வலிபிறந்திடும்படி, இத்துடன் நில்லாது, சபையின் உணர்வு தெரிந்து இரண்டாம் அடியைப் பாடிய இசைவாணர்போல இவரும்

பிரிவினை, கூடாது
என உரைப்போர்
தருவினைத்தகர்த்திடுவோம்

என்று பாடினால், இசைக்கும் மதிப்பு, சபைக்கும் களிப்பு! சர். சண்முகம், பல்கலைக் கழகத்திலே நிகழ்த்தியதே, இனிஎன்றும், எங்கும் அவர் பாடப்போகும் சிந்து என்றால், நாம் சஞ்சலமடைகிறோம் அவர்பொருட்டு! நாடு, அந்தநாதத்தை ஏற்காது! நிச்சயமாக ஏற்காது! இனம்பொறுக்காது! இனியும்பொறுத்துக்கிடக்காது!

## ஆரும்படை

5-ம் பக்கத் தொடர்ச்சி

விடுவிக்கப்பட்ட நாடுகளின் நிவாரண புனருத்தாரணவேலைகளுக்காகச்செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகள் போதியவையாயில்லை என்று உணரப்படுகிறது என்று விக்காம்ஸ்டிட் எழுதுகிறார்.

### சில இரகசியம்

அமெரிக்கத்தலைவர் ரூஸ்வெல்ட்யால்டாவிலே, முடிவு செய்யப்பட்ட சில விஷயங்கள்,இன்று இரகசியமாகவைக்கப்பட்டுள்ளனவென்றும்சமயம்வரும்போது சகலரும் தெரிந்துகொள்ளக் கூடுமென்றும், கூறியிருக்கிறார். ஜப்பானியருடன் போரிடும்பேச்சு, யால்டாவிலே கிளப்பப்படவில்லைஎன்பதையும், சோவியத் இது விஷயமாக நடுநிலையில் இருப்பதைநினைவூட்டியும்காட்டினார். தோல்விக்குப்பிறகு ஜெர்மனி, மீண்டும் போர்வெறிகொள்வது எளிதாகாதபடி ஏற்பாடுகள் எடுக்கப்படும், சோவியத், பிரிட்டன், அமெரிக்கா, பிரான்சு ஆகிய நாடுகளின் மேற்பார்வையிலே, ஜெர்மனி, வட்டாரங்களாக்கப்பட்டு, வைக்கப்படும் என்றதிட்டத்தைக்கூறினார்.

### கானடா கனிவு

மெக்சிகோவிலே நடைபெறும், அமெரிக்க பூபாக மாநாடு, கானடாவின் கவனத்தை இழுத்திருக்கிறது. இப்பூபாகத்திலுள்ளநாடுகளுக்குள், ஏற்படஇருக்கும், உறவு முறையின் பலனைப்பெற கானடாவும் இச்சைகொள்கிறது. இனி இத்தகைய உறவுமுறையிலே தொடர்புவைத்துக்கொள்ள, விரும்பும் கானடாவை, அமெரிக்கபூபாக நாடுகளின் கழகத்திலே உறுப்பினராக்க ஒருமுயற்சிநடைபெறும் என்றுதெரிகிறது. போருக்குப்பிறகு,ஏற்படஇருக்கும் பொதுஉணர்ச்சிக்கு, இது துணை செய்யும் என்று கூறலாம்.

### நமது வீரர்

பசிபிக்கிலும், பர்மா முனையிலும் ஜப்பானியரின் பலம் முறியடிக்கப்பட்டு வருகிறது. மணிலா,போர்க்களப் பகுதியிலே, வெற்றி பெற்றதுபற்றி மக்ஆர்தர் அறிக்கை விட்டிருக்கிறார். டோக்கியோ மீது நடைபெற்ற விமானத் தாக்குதல் பெரும் சேதத்தை விளைவித்திருக்கிறது. மாண்டலேநகர, பொன் கோபுரச்சிகரங்கள், கண்களுக்குத் தெரியக்கூடியஅளவு, பர்மாமுனையிலே நேசப்படைமுன்னேறியிருக்கிறது. பலபோர் முனைகளில் பெற்றது போலவே இங்கும்நமது வீரர்கள்—விஜயலட்சுமி அம்மையாரின் துடுக்குத்தகரும்படிவெற்றிபலகண்டிருக்கிறார்கள். ஒருஎடுத்துக்காட்டு.

ஆக்யாப் தீவில் முதல் முதலில், இந்தியவிமானப் படையைச்சேர்ந்த ஆள், சென்னை ஒருமதராஸிதான்! இவர் பெயர் பி. பெரியநாயகம்ஸ்வாமி-மதராஸ், புதுப்பேட்டை இரண்டாந்தெரு, நெ. 52ல் வசிப்பவர்.நம்முடைய துருப்புகள் உள்நுழைந்த12-மணி நேரத்திற்குள் சிதறிக்கடந்த ஆக்யாப் தெருக்களின் வழியாக ஒரு விமானப்படைஜீப் வண்டியை ஓட்டிப்போய்க்கொண்டிருந்தார்.

ஸ்வாமிக்குதற்சமயம்23வயது.1943ம் வருஷம் இந்தியவிமானப்படை டள்ளிக் கூடத்தில் சேர்ந்தார். செகந்தராபாதில் மோட்டார்வண்டி ஓட்டக்கற்றுக்கொண்டார். இந்தியாவில் அநேக இடங்களில் சேவைசெய்திருக்கிறார். முன்னணிகளுக்குச்சென்று சிலமாதங்களே ஆகின்றன.

விளையாட்டுகளில் மிக்க ஆர்வமுடையவர். மதராஸ் கால்பந்து விளையாட்டில் பிரசித்தமான, ''மினர்வாக்ளப்''பிலும் ஒரு மெம்பர்.

: (o) :

### காஞ்சி

12—2—45ல் இவ்வூர் திராவிடகழகத்தின் ஆதரவில் தோழர் ஈழத்தடிகள் தலைமையில் இந்துசட்ட சீர்திருத்தத்தை ஆதரித்தும் அதன் அவசியத்தைப்பற்றியும்தோழர்கள் டி.பி.எஸ். பொன்னப்பா சி. வி. இராசகோபால், திருச்சி பாலசுப்பிரமண்யம், ஜி, சீனு, சாமிநாதன்,வெங்கட்ராமன், திருக்கழுக்குன்றம் துரைசாமி, ஆகியோர் பேசினர்.

### சிதம்பரம்

26-2-45ல் இவ்வூர்உயர்நிலைப்பள்ளியில் தோழர் எஸ். எ. மகம்மதலிசாகிபு (கூத்தநல்லூர் ஆராபியக்கல்லூரி பிரின்ஸி) அவர்கள் தலைமையில்நபிகள்பிறந்தநாள் மாநாடாகக் கொண்டாடியபோது புலவர் முருகேசனார் இந்து மதத்தை ஏனைய மதங்களுடன் ஒப்பிட்டு, அதன் கொடுமைகளை எடுத்துக்காட்டினார். இடையே நாகராஜய்யர் என்ற பார்ப்பனவழக்கறிஞர் இந்து மதத்தை இழித்துப்பேசாதே என்றுக்கூறிக்கொண்டே சென்றுவிட்டார். பிறகு தோழர் காஞ்சி கலியாணசுந்தரம் ஐயர் கூறிச் சென்ற பேச்சுக்கு ஆணித்தரமாகப் பதிலுரைத்தார்.

29—4—45ல் சென்னையில்
சிவாஜி
கண்ட
இந்து ராஜ்யம்!
என்னும் நாடகம்
சென்மேரிஸ் ஹாலில் நடைபெறும்

தொடர் கதை,

★

சௌமியன்.

# பார்வதி பி.ஏ;

கதை கற்பனையே, கதையில்வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவனவல்ல.

ஜப்பானியன், ரயில்கள் கவிழ்க்கப்படவேண்டும்! தபாலாபீசுகள் தீப்பற்றி எரிய வேண்டும்! என்று, பேசுகையிலே, அவனுடைய கண்களிலே, தீப்பொறி பறந்தது. ஆவேசம் வந்தவன்போல ஆடினான். அவன் உரையைக் கேட்டுவிட்டான் குமார்! திடுக்கிட்டுப்போனான். பார்த்திபனைக்கூவி அழைத்தான்.

"இந்தக்குள்ளன் என்ன வெல்லாமோ குளறுகிறானே என்ன விஷயம்". என்று கோபமாகக் கேட்டான்.

ஜப்பானியன் கோரமாகச் சிரித்துவிட்டு,

"இருபது ஆண்டுகளாக இந்தியாவிலே இருந்துவந்தேன், என் தாய்நாட்டைவிட்டு. எத்தனையோ வேடங்களிலே உலாவி வந்தேன். உங்கள் தமிழைக் கற்றுக்கொண்டேன். எதற்காகத்தெரியுமா?" என்று கேட்டான்.

"எங்கள் நாட்டிலே இடர்விளைவிக்க!" என்று பதிலுரைத்தான், குமார். பிரமநாயகத்தின் மனம், மகிழ்ச்சியுற்றது.

"அல்லடா முட்டாளே! உங்கள் நாட்டை, ஆங்கிலேயரிடமிருந்து விடுவிக்க" என்றான் ஜப்பானியன். அந்தப் பல்லவியைத்துணையாகக் கொண்டு, பார்த்திபன், சுதந்திரத்தின் மேன்மைபற்றிப் பாடலானான். குமார் கொதிப்புடன் இருந்ததால் பார்த்திபனும் ஜப்பானியனும் கூடிக்கொண்டு ஏவிய சொல்லம்புகளுக்குத் தக்கபதில் கூறமுடியாதுஇருந்தான். இந்தக் காட்சியைக் கவனித்து இருந்த பிரமநாயகம், தெளிவான குரலிலே, ஆனால் கோபமின்றி, "சுதந்திரத்தின் மேன்மையை மறுப்பவர் மடையர்கள்!" என்று கூறினார், உடனே பார்த்திபன், சந்தோஷமடைந்து, குமாரை நோக்கி, "கேள் குமார்! ஒரு ஆண்டிக்கு இருக்கும் அரசியல் அறிவுகூட உனக்கு இல்லையே! சுதந்திரத்தின் சூட்சமத்தை மறக்கும் பேர்வழி உண்மையிலே மடையன்" என்று கூறினான். பிரமநாயகம், சுதந்திரம், மேன்மையானது. அதைப் பெறுவது நமதுபிறப்புரிமை. அதைத்தர மறுப்பது கொடுமை" என்று பேசினார். "சபாஷ்! சபாஷ்! குமாரின் காதிலேஇந்தச்சிந்து ஒலிக்கட்டும். இன்னொருதடவை கூறு. அவன் மூளையிலேஇருக்கும் அழுக்கு போகுமட்டும் கூறு" என்றுபார்த்திபன், கூறினான்.

அவனுடையபாராட்டுதலுக்காகக்காத்திக்கொண்டிராமல், பிரமநாயகம் பேசலானார். "சுதந்திரத்தைப்பெற முயற்சிக்காத மக்கள் மனித உணர்ச்சியே இல்லாதவர்கள், சுதந்திரத்தைப்பெற சகல முயற்சிகளும் எடுக்கவேண்டியதுதான். ஆனால்........," என்று இழுத்திடவே, பார்த்திபன் குறுக்கிட்டு, 'ஆனால்என்ன'? என்று பதைப்புடன் கேட்டான். "ஒன்றுமில்லை! சுதந்திரம் தானமாக வரக்கூடாது. அதைப்பெறவும், பெற்றதைநாம் பிறனிடம் இழந்துவிடாதபடி பாதுகாத்துக்கொள்ளும் திறமும் வேண்டும்" என்றார். அதுகேட்ட குமார், வெற்றிப் புன்சிரிப்புடன் பார்த்திபனை நோக்கி, "இப்போது நீ கவனி. இந்த ஆண்டிக்கு இருக்கும் யூகமும் உனக்கில்லையே,பார்" என்று சொன்னான். ஜப்பானியன்,"ஆசியாகண்டத்திலே, இந்தியாவும் ஜப்பானும் இருக்கின்றன. ஆகவே அவை ஒன்றுக்கொன்று உதவி செய்துகொள்வது முறை. அந்த முறையிலேதான் எங்கள் நாடு இந்திய விடுதலைக்காக உதவி செய்கிறது" என்று பிரமநாயகத்தின்வாயடைக்கக்கூறினான். "ஆசியாகண்டத்துப்பழம் பெரும்நாடான சீனாவைச்சித்திரவதை செய்து கொண்டே இந்த சித்தாந்தத்தைப்பேசும் துணிவு உங்களுக்கு இருக்கிறது. ஆனால் உங்கள் பேச்சைக்கேட்டு நம்பும்மடைமைஇங்கே பலருக்குஇல்லை" என்று பிரமநாயகம் சவுக்கடி தந்தார். சபாஷ்! என்று கூவினான் குமார்! ஓடிச்சென்று பிரமநாயகத்தைத் தழுவிக்கொண்டு, "நீ ஆண்டியல்ல! நிச்சயமாக ஆண்டியல்ல" என்று ஆனந்தத்துடன் பேசினான்.

"ஆமாம்! இவன் ஆண்டியல்ல! பார்த்திபா! நீ ஏமாந்துபோனாய்!'; என்று மிரட்சியுடன் கூவினான் ஜப்பானியன். "மோசக்காரா! யார் நீ?" என்றுமிரட்டினான் பார்த்திபன், "யாராயிருந்தால் என்ன? இவன் யார் என்று தெரிந்தும் இவனுடன் உறவு கொண்டாடும்உனக்கு நான் யார் என்பதுபற்றி அவ்வளவுகவலையா அப்பா!" என்று கேலிபேசினார் பிரமநாயகம்.

"ஐயா! நான் நம்பி மோசம் போனேன்! நானும் இந்தப்பார்த்திபனுமாகத்தொழிலாளர் இயக்கத்தை நடத்தி வந்தோம். நிதி திரட்டினோம். அந்தப் பணத்தை முதலாகவைத்து இந்தப்பாசறையை அமைக்கலாமென்றும், இரகசியமாக இந்த ஏற்பாட்டை நான் கவனித்துக்கொள்வதென்றும், இவர் வெளியே இருந்து உதவி திரட்டிவருவாரென்றும், புரட்சிக்கு ஏற்ற சமயமாகப்பார்த்து நடத்துவதென்றும் கூறினான். நான்நம்பினேன். மோசம் போனேன்" என்று குமார், அழுகுரலிற் கூறினான். பிரமநாயகம் "மோசம்போக இருந்தாய், தப்பினாய்" என்று தைரியம் கூறினார். "சுட்டுத்தள்ளு இந்த நாய்களை" என்று, ஜப்பானியன் உத்திரவிட்டான்.

"சுதந்திரத்தைத் தானமாகத்தருபவனின் பேச்சைப்பார்!" என்று கூறிச் சிரித்துக்கொண்டே ஒரு ஊது குழலை எடுத்து ஊதினார் பிரமநாயகம். ஆயிரவரில் பலர் ஓடிவந்தனர். ஜப்பானியனுடைய கூலிகளுக்கும்பிரமநாயகத்தின் படைக்கும் சண்டைமூண்டது. ஜப்பானியன் நிலைமை தனக்குப் பாதகமாகி விட்டது தெரிந்து, ஒரு கத்தியால் குத்திக்கொண்டு மாண்டான். பார்த்திபன் அவனுடைய ஆட்களுடன் கைது செய்யப்பட்டான்,

பிரமநாயகத்தின் திறமையைப்புகழாதார் இல்லை. மந்திரிசபை மகிழ்ச்சி அடைந்தது. இந்தச்சதி வழக்கு விசாரணையை நாட்டுமக்கள் ஆவலோடு கவனித்துவந்தனர், குமார் அப்ரூவராகி, பார்த்திபனுடைய சகல சேஷ்டைகளையும் வெளிப்படுத்தினான். ஆயுள் தண்டனை தரப்பட்டது பார்த்திபனுக்கு.

ஆலாலசுந்திரர், தன்வார்சுக்குநேரிட்ட கதி கண்டு கலங்கினார். பார்வதி, பழைய நாட்களிலேதயாரித்துக்கொடுத்த பட்டியின்படி, தனது சொத்தைப் பங்கிட்டுக் கொடுத்து விடுவதாகப் பகிரங்கமாகக் கூறிவிட்டார். தொழிலாளருக்கெனத் திரட்டப்பட்ட நிதியைக் கொள்ளையடித்தவன் குமார் என்று, பார்த்திபனுடைய பிரசாரத்தால் ஏமாந்த தொழிலாளர்கள் உண்மை தெரிந்ததும் உவகை அடைந்து, குமாரைத்தங்கள் தோழனாக ஏற்றுக் கொண்டனர்.

பார்வதி, குமாரின் விடுதலைகண்டு, மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தாள். சூதுக்காரனின் வலையிலே சிக்கியகுமார்,பட்ட கஷ்டங்களைக்கேட்டு அவனுக்கு ஆறுதல் கூறினாள்.

"இவ்வளவு அமளிக்கும் ஆதிகாரணம் என்ன தெரியுமா குமார்!" என்று பார்வதி பரிவுடன் கேட்டாள்.

"பொருளாதாரபேதம்" என்றான் இலட்சியத்திலேஇலயித்திருந்த குமார். "பொதுவிவகாரத்தைப்பற்றியல்லகுமார் நான்கேட்பது! பார்த்திபனுடையவிஷய

(10-ம் பக்கம் பார்க்க)

## பார்வதி பி.ஏ.,

9ம் பக்கத் தொடர்ச்சி

மாக" என்று விளக்கமுரைத்துவினவினள் பார்வதி

"ஆதிகாரணம் என்ன?" என்று ஆவலுடன் கேட்டான் குமார்.

'பொறுமைதான்!" என்றாள் பார்வதி.

"ஆமாம்! என்றுகுமார், அவள் கூறிய தன் முழுப்பொருளையும் உணர்ந்து கொள்ளாமலே கூறினான்.

"குமார்! நான்உன்னைக்காதலிக்கிறேன் என்ற பொறுமை அவனுக்கு" என்று பார்வதி சொன்னபோது குமாருக்கு என்னபதில் கூறுவதென்றே தோன்றவில்லை அவன், நினைப்பதற்கே கொஞ்சம் நடுக்கிய விஷயம் அது! அபாரமான ஆவல் ஆனால் அளவிடமுடியாத சந்தேகம் அது நடக்கக்கூடியகாரியமாஎன்ற. "பார்வதி! "என்றுகுமார்கூறிவிட்டு ஏதோகீதம் கேட்டவன் போல இலயித்து விட்டான்.

பார்வதியுங்குமாரும்தொழிலாளர் இயக்கக்காரியத்திலே முன்போலவேஈடுபட்டனர். சுதந்திரம் சமதர்மம், எனும் இலட்சியங்கள்நிறைவேற,முதலிலே, இந்தியாமீது கண்ணை [illegible] திருக்கும் [illegible] பேரவேறுமைத்தகர்த்தாகவேண்டும், தொழிலாளர் இதையேஇன்றையவேலைத்திட்டமாக வைத்துக்கொள்ளவேண்டும் என்று இருவரும் நாடெங்கும் பிரச்சாரம் செய்யலாயினர்.

காதல்மணம்கமழப்பதிவுத் திருமணம் நடைபெற்றது, பிரமநாயகமே அத்திருமணத்தைமுன்னின்று நடத்திவைத்தார்

(முற்றிற்று)

---

அடுத்த

தொடர் கதை

புலவர் இராமாமிருதத்தம்மாள் தீட்டிய

## "தமயந்தி"

---

சென்னை மாவட்ட

## திராவிடர் மாநாடு

மேற்படி மாநாடு; சென்னைசெயின்ட் மேரிமண்டபத்தில் 1—4—45ல் நடைபெறும்.

திருச்சி நகராண்மைக்கழக உறுப்பினர்

தோழர் N. சங்கரன் தலைமைவகிப்பார்.

பாளைய கோட்டை

தோழர் அர்சுனன்

மாநாட்டைத் துவக்கித்தருவார்.

போளூர்

தோழர் K சுப்பிரமணியம்

கொடி ஏற்றுவிழாவாற்றுவார்.

## நிகோலாஸ் தீர்ப்பு!

4-ம் பக்கத் தொடர்ச்சி

Not by the British என்றாகிவிட்டது. இந்தியவைத்தியத்தை இந்தியரே அபிவிருத்தி செய்யவேண்டும், பிரிட்டிஷார் அல்ல, என்றபொருள் ஏற்பட்டுவிட்டது. இது அவர் சொல்லாததுமட்டுமல்ல அவர் சொன்னதற்கு நேர்மாறானது. தலைநீந்தது கற்பு அல்ல என்ற சொற்றொடரில் அல்ல என்ற ஒரேபதத்தைநீக்கிவிட்டால், என்ன பொருள் ஏற்படும்? எவ்வளவு விபரீதம்! திடீரென்று ஓர்நாள் பத்திரிகையிலே கொட்டை எழுத்திலே

காந்தி மீரா ரசம் என்று ஒருதலைப்பு வந்தால், தேசியவாதிகள்எவ்வளவுதிடுக்கிடுவர், தூற்றுவர், கண்கண்ட தெய்வத்தையும் கடல் கடந்துவந்த அன்னையையும் இப்படி அவமதிக்கலாமா? என்று எவ்வளவு கோபிப்பர்? அவர்களின் கோபத்தைஅடக்க."ஐயா கொஞ்சம்அச்சுப்பிழைநேரிட்டுவிட்டதுபொறுத்திடுக.

காந்தி மீராசமரசம் என்றுவெளியாகியிருக்கவேண்டும், எப்படியோதவறிசமரசம் என்பதிலே ம என்ற ஒரே ஒரு எழுத்து விடுபட்டுப்போனதால், காந்தி மீராசரசம் என்று வெளிவந்துவிட்டது- என்று என்ன சமாதானம் சொன்னாலும் ஏறுமா, தேசியச் செவிக்கு? அது போலத்தானே இருக்கும் நிக்கோலசுக்கும். எவ்வளவுதிடுக்கிட்டுப்போயிருப்பார் இந்தக்"சத்தரி" வேலையைக்கண்டு. எனவேதான், இந்தப்பத்திரிகைகளைப்பற்றி அவர் மிகக்கேவலமாக மதிப்பிடலானார்.

அவர்தமது புத்தகத்திலே ஒளிக்காமல் உரைக்கிறார் நான், இந்த ஏடுகளைக் கொஞ்சமும் மதிக்கமறுக்கிறேன்என்று.

"என்னய்யா விசேஷம்? ஏன்வந்தீர்கள்? நான் என்ன கூறுகிறேன் என்பதைக்கேட்கும் வழக்கமோ உங்களுக்குக் கிடையாது. அப்படிக் கேட்டாலும் புரிந்துகொள்வதில்லை.புரிந்துகொண்டாலும், பத்திரிகையிலே வெளியிடும் போது திரித்துத்தான் தீட்டுவீர்கள். இரண்டேகாரணங்களே உள்ளன நீங்கள் இங்கே வர என்னை ஏதாவது புளுகச் சொல்லலாம், அல்லது நாம் ஏதாவது புளுகிவிட்டுப்போகலாம் என்ற இருகாரணங்கள் தானே" என்றுநிக்கோலாஸ்அந்தப்பத்திரிகைப் பிரதிநிதிகளைக்கேட்பாராம்.

'எங்களைப்பற்றிக்கேவலமாகமதிப்பிடுகிறீரோ" என்று அந்தபிரதிநிதிகள்கூறுவராம்.

"கேவலமா? மிகக் கேவலமாகத்தான் மதித்தேன்" என்பாராம் அவர். அந்தக் கோபத்தைத்தான், கக்கியுள்ளனபெரும்பாலான ஏடுகள். கோபம் வந்துபயன் என்ன?

Susila's message to Mahatma என்றதலைப்புடன்,மான்செஸ்டர்கார்டியன்பத்திரிகைக்கு,வார்தாவாசி ஒருசெய்தி அனுப்பி. அது Susila's massage to Mahatma என்று ஒரு சிறு எழுத்துப்பிழையுடன் [ஆனால் விநோதமானபொருள் வேறுபாடு படும்படி] வெளிவந்தால், சீமை ஏட்டினை எவ்வளவு கண்டிப்போம்? ஆஸ்ரம விஷயம் வேண்டாம் அரசியல் விஷயமே எடுத்துக்கொள்வோம். Not only the japs but the British should quit India என்றசெய்திசீமைப்பத்திரிகைக்கு அனுப்பப்பட்டு, அங்கே only என்ற பதம் சிதைக்கப்பட்டு

Not the Japs but the British should quit India என்று வெளிவந்தால், என்னென்னகூறுவோம் அந்த ஏடுகளைக்கண்டித்து. ஏன் அந்த மதி, தேசியநிதியைப் பெற்றிருப்பதாகக் கருதும் ஏடுகளுக்கு இல்லாமற் போய்விட்டது! "கத்தரிவேலை" கஷ்டமானதல்ல, ஆனால் கண்ணியமான காரியமல்ல. அது கண்டனத்துக்குரியது. நிக்கோலாஸ்கண்டித்ததிலே தவறு என்ன?

(தொடரும்.)

———:(o):———

### முகவரி

தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்களின் தற்போதைய முகவரி.

இரா. நெடுஞ்செழியன்
வார்டன்
யு. எம். எஸ். ஹாஸ்டல்
அவனாசி ரோடு
கோயமுத்தூர்

---

### திராவிடர் கழகம்.

குணிய முத்தூர் திராவிட கழகத்தின் திறப்பு விழா 4—2—45ல் தோழர் J. S. கண்ணப்பர் அவர்களின் தலைமையின்கீழ் தோழர் இரா நெடுஞ்செழியன் அவர்களால் ஆற்றிவைக்கப்பட்டது. கோவை கல்லூரிமாணவர் இராமசாமி அவர்களும் சொற்பொழிவாற்றினார்கள்.

---

### பூவிருந்தவல்லி

பூவிருந்தவல்லி, போர்டு உயர்தரக் கலாசாலையில் தமிழ்த்திருநாள், ஜில்லா போர்டு தலைவர் தோழர் T. சண்முகம் அவர்கள் தலைமையில் 24-2-45 மாலை, பள்ளி மண்டபத்தில்விமரிசையாக நடைபெற்றது. மாணவமாணவிகளின் சொற்போர் ஆடல்பாடல்களுக்குப் பிறகு தலைவர் தமது முன்னுரையில் விழா நோக்கத்தை விளக்கிப்பேசினார். பிறகு தோழர் C. N. அண்ணாதுரை, பழங்காலத்தமிழர் நாகரிகம் எனும் பொருள்பற்றிப்பேசினார். கலாசாலைத் தலைமை ஆசிரியர் நன்றிகூறினார். இரவு விருந்துக்குப்பிறகு, மாணவர்கள் "குலோத்துங்கன்" எனும் வரலாற்று நாடகமாடினார்கள்.

## மதுரைக்கு டிக்கட் இல்லை!

2-ம் பக்கத் தொடர்ச்சி

டாட்டி என்ன, புலியா கரடியா? இப்படித்தான் சிலபேர், எனக்குக்கலியாணமே வேண்டாம்; கலியாணம் தொல்லை என்று பேசுவார்கள். எதற்கு? கண்டபடி ஆடலாமென்றுதான். கலியாணம்செய்து கொண்டு குடும்பத்தை நடத்தாவிட்டா, கையிலே வருகிற பணத்தைக் கண்டபடி செலவு செய்துவிட்டு, உடம்பைக்கெடுத்துக்கொண்டு உதவாக்கரையாக வேண்டியதுதானே. இல்லே, நான்தான் கேட்கிறேன், என்னமோ பாவம் காலையிலே போனார் வேலைக்கு, சாயங்காலம் வருகிறார், அப்பான்னு அலுத்து வீட்டுக்குவந்ததும், தாகத்துக்கு வேணுமான்னுகேட்க ஒரு சம்சாரம் வேண்டாமா? நாலுநாளு நோவுன்னு படுத்தாரு, பக்கத்திலே இருந்து பிடிக்க எடுக்க ஒருத்தி வேண்டாமா? அதுகபாவம், இன்னைக்கோ நாளைக்கோன்னு இருக்கு. அதுங்க சாவதற்குள்ளே ஒரு பேரனையோ பேத்தியையோ பார்த்துட்டுப்போக வேணுமா? அந்த ஆணுக்கு ஏன் இதெல்லாம் தோணலையாம்? நல்ல மனுஷரு அவரு. அவர் சம்பாரிச்சி அவரே சாப்பிடவேணுமாம், பெண்டாட்டி கூடாது. ஏன்? அவளுக்குச் சோறுபோட வேணுமே" என்று சௌபாக்கியம், மள மளவென்று பேசுவாள். மறுமாலே, திருமலை இந்தத்திவ்யப் பிரபந்தத்தை மதுரைக்குச் சமர்ப்பிப்பான். ஆறணா பத்தணாவாகி, ஒரு ரூபாயுமாகிவிட்டது. ஆறணா கிடைத்தபோது, "திருமலே! உன்வீட்டுக்காரம்மா வாயாடி போலிருக்கு" என்று கூறின மதுரை, ஒரு ரூபாயான சமயத்திலே அதேபிரபந்தத்துக்கு, "உன்சம்சாரம் சொல்வதுபோலத்தான் எல்லோரும் சொல்லுவாங்க" என்று சாந்தமாகப் பதில் கூறினான். கூலியும் உயர்ந்தது. அதே சமயத்திலே, பெரியநாயகியின் புன்சிரிப்பும் கிடைத்தது. அவள் அவனுடைய பிரம்மசரியத்தைக்கலைக்க அச்சிரிப்பை ஏவவில்லை. அவனைக்கண்டாள், அக்கா அவனைப்பற்றிச் சொன்னதை எண்ணினாள், சிரித்தாள்! அது அவனுடைய விரதத்தைக் குலைத்துவிட்டது. பெரியநாயகி, சௌபாக்கியத்தின் தங்கை!

கிருஹஸ்தாஸ்ரமத்திலே புகுந்தான், மதுரை. பிரம்மச்சரியம் அனுஷ்டிக்க வேண்டியதற்கு எவ்வளவு பலமான காரணம் அவனுக்குத் தோன்றிற்றோ, அவ்வளவு [illegible] காரணம் தோன்றிற்று இந்தப் புது ஆஸ்ரமத்துக்கும்!

வீடுன்னு இருந்தா அதிலேநமக்குன்னு ஒரு [illegible] உலாவுறதான் [illegible] கல்யாணமில்லாம [illegible] எத்தனை காலந்தான் இருந்தோம், என்ன பலன்! வீட்டுக்குள்ளே நுழைகிறபோதே, பெரியநாயகி [illegible] பார்த்து, 'வெந்நீர் வேணுமா?' என்று கேட்டவுடனே, காலையெல்லாம் பட்ட கஷ்டமத்தனையும் காற்றாப்பறந்துபோயிடுது. என்னமோ உழைக்கிறோம், பெரியநாயகி அன்போடு சாப்பாடு போட்டு, காலையிலே செய்த கறியிலே நமக்குன்னு கொஞ்சம்எடுத்துவைத்திருந்து இரவிலே போடுவதும், இன்னும் கொஞ்சம், ஒரே ஒருபிடி, என்று உபசரிப்பதும், என்னாங்க! எவ்வளவுபாடு உங்களுக்கு? வயிறாரச்சாப்பிடவேண்டாமா? எல்லாம் உடலிலே பலம் இருந்தா தானே என்று கனிவாகப் பேசும்போதும், வர வரத்துரும்பாக இளைத்துப் போறிங்க என்று வைத்தியராகும் போதும், தலைவலிக்குத் தைலம் தடவும் போதும், அடடா! அது ஒரு தனிஇன்பமாகத்தான் இருக்கிறது. மனிதனுக்கு, எவ்வளவு கஷ்டந்தான் இருக்கட்டும், வீட்டிலே ஒரு மனைவி இருந்தாலே, அது ஒரு சந்தோஷம்தானே!—என்று மதுரை எண்ணிக்களித்தான். பெரியநாயகி, தாயானதும், அவனுடைய சந்தோஷம் அதிகரித்தது. இரண்டு குழந்தைகளானபோதும் சந்தோஷமாகத்தான் இருந்தது, "அவன் எங்கே? சின்னவனை ஜாக்ரதையாகக் கவனி! ஜலதோஷம்போல இருக்கே" என்று சொல்லுவான் மதுரை, பூரிப்பு தழுவிய பொறுப்புடன். நாலு குழந்தைகளாகிவிட்டன. சந்தோஷம் சஞ்சலத்தைப்பெற்றுவிட்டது.

"அடடா! காச்சுமூச்சுன்னு, ஏன் இதுகள் இப்படிக்காக்காயாகக்கத்துதுங்க?"

"குழந்தைகள் இருந்தா அழாமே இருக்குமா?"

"குழந்தைகள்! மகாகுழந்தைகள்! கோட்டான்கள் மாதிரி கூவி உயிரை வாங்குதுங்க."

"இந்தப்பாவிவயிற்றிலேவந்துபிறந்ததுங்களே, அதுகள் இப்படித்தான் சீரழியும். அப்பாப்பா! குழந்தைகளை இப்படி அலற அடிக்கக்கூடாது."

கிருஹஸ்தாஸ்ரமத்திலே, விசாரம்குடிபுகுந்தது. குடும்பம்வளர்ந்தது, கூலிவளரவில்லை. கோபம் பெருகிற்று மதுரைக்கு. பிரம்மச்சரிய ஆஸ்ரமத்தைவிட்டு விலகியது தவறுஎன்று தோன்றிற்று. நாலு பிள்ளைகளுக்குத்தகப்பனானபிறகுபழைய ஆஸ்ரமத்திலே பாசம்வைத்துப் பயன் என்ன?

வைசூரியின்பிரவேசத்தால், மதுரைக்கு மூன்றாம்ஆஸ்ரமம்சித்தியாயிற்று. பெரியநாயகி வைசூரிக்குப் பலியானாள். நாலு குழந்தைகள்! நாரும் நரம்புமாகப் பெற்றோர்கள். இந்நிலையிலே, முதலாளியிடம் சண்டை! வேலைபோயிற்று! கிருஹஸ்தாஸ்ரமத்தின் முழுவிஷமும் அவனுடைய உள்ளத்திலே புகுந்தது. உருமாறினான். உள்ளமும் மாறிவிட்டது. வானப்பிரஸ்தம்புகுந்தான்—அதாவது திருமலையிடம், குழந்தைகளை அடைக்கலமாக்கினான்! பெற்றோர்களை ஈசனிடம் ஒப்படைத்தான். கங்காணி கனகசபையின் காலைக் கும்பிட்டுக்கூலிவேலைபெற்று, ரப்பர் காட்டுக்குப்போனான்! பர்மாவிலே, பாடுபட்டான்; குடும்பம்இல்லை, வானப்பிரஸ்தாஸ்ரமம்! அதுஓரளவுக்குத் திருப்திதந்தது. வேலைசெய்வான். கிடைப்பதை உண்பான்! கை, தலையணை, உறக்கத்துக்குப்பதில் ஏக்கம்! இந்நிலையிலேசிலஆண்டுகள் இருந்தான். வானப்பிரஸ்தம், குடும்பத்தை ஏற்றுநடத்தவேண்டிய பொறுப்பிலிருந்து விலகிய நிலைமை, அதிகநாள் நீடிக்கவில்லை. மூத்த பையன் முடிச்சவிழ்த்தான், மூன்றுமாதம் தண்டனை! இரண்டாவது பையன் இன்ன இடம் போனானென்று தெரியவில்லை, எவனோ ஜாலவித்தைக்காரன் வந்தான் அவனோடு ஓடிவிட்டான். மூன்றாவது பெண்! அது, மூன்றுநாள் ஜுரத்திலே, போய்விட்டது. நாலாவது பையன் அவன் தோட்டத்துக்கிணற்றிலே தவறி விழுந்துவிட்டான், அடுத்தடுத்துக்கிடைத்தன இத்தபால்கள். வானப்பிரஸ்தத்திலே இருந்த மதுரையின், துக்கம் சம்பூர்ணமாக, அவனுடைய பெற்றோர்கள், பிச்சையெடுக்கிறார்கள் என்றோர் தபாலும் கிடைத்தது. உடனே, அவன் ரப்பர் தோட்டவேலையையும் விட்டுவிட்டான். அலைந்தான்! அலைந்தான்! ஐயா கொஞ்சம் சோறு என்று கேட்டுப்பார்த்தான்! எச்சில்இலைகளிடம் உறவுகொண்டான்! ஆண்டிசிலரின் நேசம்பெற்றான். காவி அணிந்தான். நீறுபூசினான்! கஞ்சாவுடன்கொஞ்சினான். சன்யாஸ ஆஸ்ரமத்திலேபிரவேசித்தான். வேலைகிடையாது! கூலி கேட்கத்தேவையில்லை! குடும்பம் இல்லை, எனவே பொறுப்புகிடையாது! கிடைத்தால்புசிப்பது! கிடைக்குமட்டும்பஜிப்பது!! இந்தச் சன்யாச ஆஸ்ரமத்திலே, வானப்பிரஸ்தவாட்டமோ, கிருஹஸ்தாஸ்ரமக் கஷ்டமோ இல்லை! அதுமட்டுமா! பிரம்மச்சரிய ஆஸ்ரமத்தின் தனிமையும் இதிலே இல்லை! சன்யாசி மதுரைக்குச் சன்யாசினிஒருவளும் கிட்டிவிட்டாள்! அவளுக்கும் "அரோகரா" கூறத்தெரியும் இவன்போலவே!! ஆகவே இவனால்தான் பிழைத்தாகவேண்டுமென்றநிலைஇல்லைஅவளுக்கு ஆனால் அவளுக்கு ஒரு "அவன்" தேவை! சன்யாஸ ஆஸ்ரமத்திலே, மதுரைசஞ்சலமின்றி இருந்துவந்தான்.

* * * *

இந்த மார்க்கத்திலே உள்ள இலட்சிய எழில்கள், சாமான்யமானவையல்ல. தர்மம், அர்த்தம் காமம், மோட்சம் என்ற உன்னதமான கொள்கைகள் என்ன! பிரமச்சரியம், கிருஹஸ்தாஸ்ரமம், வானப்பிரஸ்தம், சன்யாசம் எனும் நான்கு ஆஸ்ரமங்களென்ன! இவைகளின் [illegible] உறைவிடமாக விளங்குவது [illegible]மார்க்கம்.

(12-ம் பக்கம் பார்க்க)

## மதுரைக்கு டிக்கட் இல்லை!

[illegible] பக்கத் தொடர்ச்சி

[illegible] வேண்டும் தேசத்தில் [illegible] வேண்டும், என்றவர் [illegible] கிருர் [illegible]. ஆனல், இந்த ஆச்சார்ந்த இலட்சணத்தை, இந்தமாறுதல்கள் [illegible] திட்டத்தைத்—[illegible], கவலைப்பட்டார், ஒரு நீதிபதி சென்ற கிழமை சென்னையில், ராமகிருஷ்ண மடாலய விழாவிலே, அட்வகேட் ஜெனரல் வேலையிலிருந்து [illegible] வேலைக்குச் செல்ல இருக்கும் அய்யர் ராஜமன்னர் அவர்கள், இந்துமார்க்கவிசேஷம்பற்றிப்பேசினர். சுவிசேஷம் படித்த, மிஸ்டர் ஆஸ்டின், சுடச் சுடப்பதிலுரைத்தார்,'' இந்த இலட்சியங்கள் எழிலுள்ளன தான்! மார்க்கமணிகள் தான்! ஆனல் காலையிலே எழுந்திருச்சிக் கஞ்சித்தண்ணி இல்லாமே கஷ்டப்படும்'' பாட்டாளி காணச்சகியாத இடத்திலே இருந்துகொண்டு பசியால் பரதவித்து, ஒருவேளைச் சோறு எங்கிருந்து கிடைக்கும் என்பதறியாது தேம்பிக்கிடக்கும்போது, அவனுக்கு இந்தத் தேவவாக்கும், திவ்யபோதனையும், ஆஸ்ரம இலட்சணமும், என்னய்யா விளங்கும்! எப்படி ஐயனே! அவன் அந்த மார்க்க தத்துவங்களின் போதனைகளை உணருவான், என்று கேட்டார்.

ஆம்! ஆஸ்டின் துரைமட்டுமல்ல, நாலு ஆஸ்ரமத்திலேயும் நிலைமை, வறுமை, நெருக்கடி, கஷ்டப்பொருளாதார பேத முறையினுல் தள்ளப்பட்டுத் தள்ளாடி நடந்துவரும் மதுரை, நாகரிகவாழ்வுக்கு, வசதிபெற்ற நமது அன்பர் நவின்ற நாலு ஆஸ்ரம போதனையைக்கேட்டு நகைக்காமல் இரான்!

"நாலு ஆஸ்ரமங்களின், மேன்மையை நானறியேன் துரைமார்களே! ஆனல் நானும், என்னைப்போல் எண்ணற்றமக்களும், இந்த ஆஸ்ரமங்களின் அவலட்சணத்திலே புரண்டிருக்கிறோம். புனிதமல்ல, இதன் காரணம்! சமுதாயத்திலே புரையோடி இருக்கும் வறுமை! அது போக, உமது வேதபுத்தகத்திலே வழி இருந்தால் கூறுங்கள். மார்க்கம் அறிந்த மகானுபாவர்களே! வாழமார்க்கமில்லாத எமக்கு வாழ்வளிக்க, உங்கள் மார்க்கத்திலே மார்க்கமுண்டா கூறுங்கள்! கேட்போம்!'' என்றுகூறுவான். ஆனல் நீதிபதி, நிர்மலமான இந்துமார்க்கதைப்பற்றி இதோபதேசம் செய்தஇடம், இல்லாமையால் இடர்ப்படும், மதுரை செல்லக்கூடிய இடமல்லவே! உயர்நீதிமன்றஅதிபர்களும், அரசியல் அலுவலர்களும், மெருகுகலையாத மோட்டார்ஏறிச்சென்றுமேதினியின்நிலையாமைபற்றியும்வாழ்வு பொய்என்பது குறித்தும், வாயுரைசெய்யும் இடம்! மதுரை, எப்படி அங்கே போவான்!! அது தத்துவமுணர்ந்த தனவான்கள், சித்தாந்தமுணர்ந்தசீமான்கள், வறுமையறியாத விவேகிகள், வாட்டமறியாதவேதாந்திகள், செல்லக்கூடியஇடம்! அங்கேபோக, மதுரைக்கு "டிக்கட் கிடைக்காது!

—:(o):—

### நல்லதீர்ப்பு

சென்னை, கிருத்தவக்கல்லூரித் தமிழ்க் கழகத்தில் 19ந்தேதி மாலை 6-மணிக்கு, தோழர் கோவிந்தனர் தலைமையில். தோழர் சி. என். அண்ணாத்துரை "நல்ல தீர்ப்பு'' எனும் பொருள்பற்றிப் பேசினர். கழகஅமைச்சர் தோழர் துரைஅரசு நன்றி கூறினர்.


தந்தி:—"புறமார்க்'' திருச்சி.





காஞ்சிபுரத்தில்

### செல்வம் நாள்.

பெரியார் பேருரை.

6-3-45ல் காஞ்சிபுரத்தில், திராவிடமணி சர். செல்வம் நினைவுநாள் கூட்டம் நடைபெறும்.

பெரியார் ஈ.வே.இராமசாமி அவர்கள் பேருரையாற்றுவார்கள்.

செங்கற்பட்டு மாவட்டத் தலைவர் தோழர் T. சண்முகம் அவர்கள் தலைமை வகிப்பார்.





கைதேர்ந்த ஆட்களைக்கொண்டு தயாரிக்கும்

# கிளி மார்க் பட்டணம் பொடி.

தென்னிந்தியா எங்கும் புகழ்பெற்றது. காரம், மணம், நிறம், வாடை கமழும், எமது கிளிமார்க் பட்டணம் பொடியை உபயோகியுங்கள்! ஒருமுறை உபயோகித்தால் என்றும் நீங்காது ஞாபகம்.

விலை விபரம்:— நீ-1. பவுன்கலர் வீசை 1-க்கு ரூ. 10—0—0.
நீ-1. கருப்புநிறம் வீசை 1-க்கு ரூ. 9—0—0.

ஏஜண்டு இல்லா ஊர்களில் ஏஜண்டு தேவை.

**ஏ. எஸ். ராஜன் கம்பெனி,**
பழையவண்ணாரப்பேட்டை சென்னை


Edited Printed and Published by C. N. Annadurai M. A., at "Dravida Nadu" Press, 317—319 Hodgsonpet Conjeeveram.